Registered as a NewsPaper

விலை ரூபா-8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

பொதுசன நூலகம்
5 JAN 2005
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.



உங்கள் அனைத்துத் தேவைகளுக்கும்
R.V.பந்தல் சேவை
முல்லைச்சாலை, தருமபுரம்.
T.P:0712-610008
விநாயகர் வீதி, மயிலிட்டி.

நாதம் -15 | திருவள்ளுவர் ஆண்டு- 2035 | மார்கழி-21 | 05-01-2005 | புதன்கிழமை | ஓசை -322

# சர்வதேச உதவிகளைப் பகிர்ந்தளிக்கும் கட்டமைப்புக்களை உருவாக்க வேண்டும்!

## எமது தலைமைப்பீடத்தின் எண்ணம் இதுவே நோர்வேத்தூதுவரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் எடுத்துரைப்பு

(அலுவலக செய்தியாளர்)


**எங்கள் மக்களுடைய மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுக்க சர்வதேச உதவிகளை எங்களுடைய மக்களுக்கும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய கட்டமைப்புக் களைத் தோற்றுவிக்க வேண்டும். அதுவே எங்களுடைய தலைமைப்பீடத்தின் கரி சனையாகவும் இருக்கின்றது என்பதையும் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தியுள் ளோம் இவ்வாறு அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்கள் தெரிவித்தார்.**

நேற்றுக் கிளிநொச்சியில் இலங்கைக்கான நோர்வே தூது வர் ஹான்ஸ் பிறஸ்கரைச் சந்தித்த பின் செய்தியாளர்களின் கேள் விக்குப்பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில், இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக அவ சர மனிதாபிமானப் பணிகளை தற் பொழுது மேற்கொண்டு வரு கின்றோம். இதற்காக மாவட்ட மட்டத்தில் செயலணிக்குழுக்களை உருவாக்கியுள்ளோம். இக்குழுக் களினூடாக சர்வதேச நிறுவனங் கள் ஆரம்பக் கட்ட உதவிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)





## இத்தாலிய மனிதாபிமான உதவிகள் அரசியல்துறைப் பொறுப்பாளரிடம் கையளிப்பு!

(அலுவலக செய்தியாளர்)

இத்தாலிய நாட்டின் மனிதாபிமான உதவிப் பொருட்களான மருந்துகளைக் கையளிக்கும் நிகழ்வு நேற்றுக் காலை கிளிநொச்சியில் நடைபெற்றது.

தரை வழியாக வாகனத் தொடரணியில் எடுத்து வரப்பட்ட மருந்துப் பொருட்களை இத்தாலியத் தூதரகத்தின் வெளிவிவகார அமைச்சின் தலைவர் ஸ்ரீபன் ஸன்னனீ, அதன் முதலாவது செயலாளர், இத்தாலிய அரசின் பொது நிர்வாக மருத்துவ அதிகாரி டாக்டர் அலிஸானன்ரோ ரொபினோ ஆகி யோர் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வன் அவர்களைச் சந்தித்துக் கலந்து[illegible]ாடிய பின்னர் அதனை ஒப்படைத்தனர். விடுதலைப் புலிகளின் சமாதான செயலகத்தில் நேற்று[illegible] காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற சந்திப்பை [illegible]டுத்து, மருந்துப் பொருட்கள் உட்பட திட்டமிடல் பணி யகத்தில் வைத்து அனைத்துப் பொருட்களும் பொறுப் பளிக் கப்பட்டன. எட்டுப் பாரவூர்திகளில் மருத்துவப் பொருட்கள், கூடாரங்கள், மற்றும் மின் இயந்திரம், என்பவை மேற்படி தொடரணி மூலம் எடுத்துவரப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது

(சோ)

## ஆதாரத்துடனும் பொறுப்புடனும் செய்திகளை ஊடகங்கள் வெளியிட வேண்டும்!

### - ஊடகங்களிடம் புலிகள் வேண்டுகோள்

ஊடகச் செய்திகளில் தவறுகளும் பக் கச்சார்புத் தன்மையும் இருப்பது, தற் பொழுது முன்னெடுக்கப்படும் மனிதாபி மான உதவிப் பணிகளுக்கான கூட்டு முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் என்ப தால், அவல நிலையைக் கருத்திற் கொண்டு, செய்தி வெளியிடுவதில் அவதானமும், பொறுப்பும் இருக்க வேண்டும் என்று விடுதலைப்புலிகள் அறிக்கை ஒன்றின் மூலம் கேட்டுக்கொண்டுள்ளனர். இவ் அறிக்கையின் விபரம் வருமாறு.

வடக்குக் கிழக்கில் சுனாமி பேரலை யினால் ஏற்பட்ட அழிவால் இடம் பெயர்ந்த வர்களுக்கான மனிதாபிமான உதவிகள் தொடர்பாக உள்ளூர் மற்றும் சர்வதேச ஊடகங்களுக்கான அவசர வேண்டுகோள் இது. முற்றுமுழுதாக மனிதாபிமானம் சார்ந்த விடயங்களின் மக்களைப் பிழையாக வழி நடத்தும் விதமான தவறான ஊடக அறிக்கை

(12ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு கிழக்கு மக்களுக்கு கனேடிய உதவி சென்றடைவதை உறுதிப்படுத்துவேன்

### கனேடியப்பிரதமர் போல்மாட்டின் தெரிவிப்பு

கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையின் தாக்கத்தினால் பாதிக்கப்பட்ட இலங்கை வடக்குக் கிழக்கு மக்களை கனேடிய அரசாங்கத்தின் உதவித் தொகை சென்றடைவது உறுதிப்படுத்தப்படும் என கனடாவின் பிரதமர் போல் மாட்டின் கூறியுள்ளார்.

நேற்று ரொறன்ரோவில் தெற்காசிய பிரதிநிதிகள் பலரையும் சந்தித்த கனடாவின் பிரதமர் தமிழ் மக்களிடம் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார். ரொறன்ரோவிற்கு வடக்கே உள்ள மார்க்கம் நகரில் தமிழ் மாணவர்கள் பெரிதும் கல்வி கற்கும் பாடசாலை ஒன்றிற்கு கனடாவின் பிரதமர் நேற்று முன்தினம் காலை விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார். அங்கு கூடியிருந்த தமிழ் பெற்றோர்களிடம்சிறிலங்காவின் வடக்கு கிழக்கு பகுதிகளின் நிலை குறித்துக் கேட்டறிந்த பிரதமர், கனேடிய அரசின் உதவி எந்தவித அரசியல் தலையீடும் இல்லாமல் பாதிக்கப்பட்ட

(12ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் இயற்கை அழிவுகள் எமக்கு பெரும் கவலை தருகின்றது

### முன்னாள் அமெரிக்க சனாதிபதி கிளிங்டன்

இலங்கையில் ஏற்பட்டுள்ள இயற்கை அழிவுகள் எமக்குக் கவலை தருகிறது. இலங்கையில் சமாதானப்பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நிரந்தர சமாதானம் ஏற்படவேண்டும். இந்த நோக்கத்திற்காகவே தற்போதைய அமெரிக்க சனாதிபதி புஷ் இலங்கை மீது அதிக கவனத்தைச் செலுத்தியுள்ளார் என அமெரிக்க முன்னாள் சனாதிபதி பில்கிளிங்டன் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவிலுள்ள இந்துக்களும் , பௌத்த மதத்தவர்களும் இலங்கையிலுள்ள உறவுகளுக்கு உதவிக் கொண்டு இருக்கிறார்கள். தமிழர்களின் துன்பங்களை நாம் அறிவோம் தமிழ் மக்களின் தேவைகளையும் சுதந்திரத்தையும் ஆதங்கங்களையும் நாம் அறிவோம் அதனால் தான் அமெரிக்கா சமாதானத்திற்காகப் பாடுபடுகிறது. தமிழ் மக்கள் யுத்தமற்ற ஒரு நிம்மதியான வாழ்வையே

(12ஆம் பக்கம் பார்க்க)

## பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வை கட்டியெழுப்ப சர்வதேசமே உதவ வேண்டும்!

### கடற்படையின் சிறப்புத் தளபதி கேணல் சூசை

கடலடிப்புவி நடுக்கத்தால் பாதிக்கப் பட்ட எங்கள் மக்களின் வாழ்வைக்கட்டி எழுப்ப சர்வதேசம் தான் உதவ வேண்டும். இல்லையேல் நிலமை மிக மோசமடையும். இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் கடற்படை சிறப்புத் தளபதி கேணல் சூசை தெரிவித்துள்ளார்.

நேற்று மாலை வடமராட்சி கிழக்கு மரு தங்கேணியில் கொந்தளிப்பால் பாதிக் கப்பட்ட பகுதிகளை மீளவும் கட்டி எழுப்பு வது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். மேலும் தெரிவிக் கையில்,எங்கள் மக்கள் நீண்டகாலப் போரில் சிக்கித் தமது பொருளாதாரத்தை

(12ஆம் பக்கம் பார்க்க)

- கடற்கொந்தளிப்பின் காரணமாக -

# பாதிக்கப்பட்டோர், இறந்தோரில் பதிவு செய்யப்பட்டோர் விபரம்

(அலுவலக செய்தியாளர்)

முல்லைத்தீவுப் பகுதியில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களின் பதிவு செய்யப்பட்டோரின் விபரங்கள் கிராம சேவகர்கள் ஊடாக திரட்டப்பட்டு உதவி அரசாங்க அதிபர்களால் உறுதி செய்யப்பட்ட தரவுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இத்தரவுகள் முள்ளியவள்ளைப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் உள்ள மக்களதும், புதுக் குடியிருப்புப் பகுதியிலுள்ள நலன்புரி நலையங்களில் உள்ள மக்களதும் தனித்தனியான தரவுகளாகப் பெறப்பட்டுள்ளன.

**புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவின் நலன்புரி நிலையங்களில்**

| நலன்புரி நிலையபெயர் | குடும்ப எண் | குடும்ப அங்கத்தவர் எண் | இறப்பு | காயம் |
|---|---|---|---|---|
| அரசரெத்தினம் வீ/ம் | 96 | 384 | 18 | 34 |
| சுதந்திரபுரம் | 18 | 78 | 6 | 12 |
| விக்னேஸ்வரா | 160 | 545 | 18 | 24 |
| புது/றோ.க. | 65 | 233 | 10 | 13 |
| உடையார்கட்டு | 90 | 394 | 12 | 15 |
| விசுவமடு | 31 | 120 | 12 | 32 |
| முருகானந்தா | 63 | 250 | 22 | 19 |
| புது/பு.ம.வி. | 134 | 483 | 30 | 43 |
| கைவேலி | 117 | 444 | 33 | 33 |
| இரணைப்பாலை | 175 | 707 | 7 | 15 |
| மொத்தம் | 949 | 3638 | 168 | 240 |

**கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவு**

| நல்ன்புரி நிலையம் | குடும்ப எண் | குடும்ப அங்கத்தவர் எண் | இறப்பு | காயம் |
|---|---|---|---|---|
| 1.ம/வித்தியானந்தாக் கல்லூரி ந.பு.நி. | 336 | 1036 | 234 | 72 |
| தனியார் வீடு | 122 | 382 | 105 | 49 |
| 2..மு/றோ.க.த.பாடசாலை ந.பு.நி. | 263 | 1001 | 38 | 18 |
| தனியார் வீடு | 37 | 179 | 0 | 0 |
| 3. மு/கலைமகள் வித்தி. ந.பு.நி. | 235 | 493 | 324 | 44 |
| 4. மு/தண்ணீரூற்று சி.சி. ந.பு.நி. | 26 | 88 | 07 | 03 |
| தனியார் வீடு | 103 | 398 | 40 | 08 |
| 5. மு/தமிழ் வித்தியாலயம் ந.பு.நி. | 167 | 683 | 47 | 38 |
| தனியார்வீடு | 42 | 183 | 0 | 0 |
| 6. மு/கொக்குத்தொடுவாய் அ.த.க.பா.ந.பு.நி. | 344 | 1136 | 206 | 266 |
| 7. மு/வற்றாப்பளை ம.வி.ந.பு.நி. | 50 | 189 | 12 | 06 |
| தனியார்வீடு | 39 | 148 | 11 | 03 |
| 8. மு/குமுழமுனை ம.வி. ந.பு.நி. | 893 | 3522 | 39 | 44 |
| தனியார்வீடு | 123 | 675 | 0 | 12 |
| மொத்தம் | 2780 | 10101 | 1063 | 563 |

# தகவல் தரக்கோரிக்கை

கடற் கொந்தளிப்பு அனர்த்தத்தால் மட்டக்களப்பு இல.18 எல்லை வீதி தெற்கு தண்டுவான் வெளியைச் சேர்ந்த முருகதாஸ் ரீஸ்வினி (வயது -12) முருகதாஸ் ரிஜிசாந் (வயது- 08) பிரபாகரன்.யதுகாந்த் (வயது -04) ஆகியோரைக் காணவில்லை என அவரது உறவினர்கள் தேடுகின்றனர். இவ்வாறு காணாமல் போன இவர்கள் வன்னிப் பகுதிக்கு யாருடனோ கூடி வந்ததாகத் தகவல் கிடைத்ததை அடுத்தே தாம் இவ்வாறு அவர்களைத் தேடி இங்கு வந்ததாக உறவினர்கள் தெரிவித்தனர். இவர்களைக் கண்டவர்கள் யாரும் அரசியல்துறையினருடன் தொடர்பு கொண்டு தகவல் வழங்குமாறும் உறவினர்கள் கூறுகின்றனர்.(லோ)

# வடமராட்சி கிழக்கு மக்களை எஞ்சிய உடமைகளை எடுக்கக் கோரிக்கை

கடற்கொந்தளிப்பால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து நலன்புரிநிலையங்களில் தங்கியுள்ள வடமராட்சி கிழக்கு மக்கள் இன்று தமது வீடுகளைப் பார்வையிட்டு தங்களுடைய எஞ்சியுள்ள உடைமைகளை எடுத்து மீட்பு நடவடிக்கைக்கு உதவுமாறு கடற்புலிகளின் தளபதி மங்களேஸ் கேட்டுள்ளார்.வடமராட்சி கிழக்கில் சடலங்களை தேடிக்கண்டு பிடிக்கின்ற பணி நிறைவடைந்து சுண்டிக்குளம் முதல் குடாரப்பு வரையான பகுதிகளில் சுத்திகரிப்பு நடவடிக்கையை இன்று ஆரம்பிக்க உள்ளோம். அப்பகுதியில் உள்ள பொருட்களை எரியூட்டுவதற்கு தீர்மானித்திருக்கின்றோம். எனவே மேற்குறிப்பிட்ட பகுதி மக்கள் அப்பகுதியில் உள்ள தமக்குச் சொந்தமான பொருட்களை எடுத்துச் சென்றால் எமது இந்த நடவடிக்கை இலகு படுத்தப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (லோ,தீ)

# ஆற்றுப் படுத்தல் வேலைத்திட்ட பயிற்சிப் பட்டறைகள்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி கல்வித்திணைக்களம், கல்விக்கழகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் கிளிநொச்சி அழகியற் கலா மன்றத்தில் இயற்கையின் சீற்றத்தால் பாதிப்புற்ற எம்முறவுகளுக்கான "ஆற்றுகைப்படுத்தல்" சிறப்பு வேலைத்திட்ட பயிற்சிப் பட்டறை நேற்று நடைபெற்றுள்ளது. இப் பயிற்சிப் பட்டறையில் பங்கு பற்றிய ஆசிரியர்களைப் பின்வரும் வகையில் பிரதேச நலன்புரி நிலையக் கழகம் சென்று பணிசெய்யவுள்ளது. முள்ளியவளை-16பேர், கிளிநொச்சி-18பேர், பளை-29பேர் இப்பயிற்சித் திட்டம் இன்று கண்டாவளைக் கோட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட ஆசிரியர்களுக்கு இடம்பெறவுள்ளது. இவ் வேலைத்திட்டத்தில் பங்குபற்ற விரும்பும்ஆசிரியர்களை கிளிநொச்சி அழகியற் கலாமன்றத்துடன் தொடர்புகொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (லோ,தீ)

# கடலனர்த்தத்தால் பாதிக்கப்பட்டோரின் துயர் துடைக்க உதவுங்கள்

-முல்லை தேசிய எழுச்சிப்பேரவை கோரிக்கை

கடலனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லை மக்களின் துயர் துடைக்க முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையினர் நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளனர்.

இது குறித்து அவர்கள் விடுத்துள்ள கோரிக்கையில் முல்லை மக்களின் துயர் துடைக்க எல்லோரும் உதவுங்கள். உயர்பிரிந்து, உடமைகள் இழந்து, உறவினர்களை இழந்து தவிக்கும் முல்லை மாவட்ட மக்களின் வாழ்வுக்கு உதவுங்கள். பிரிந்தது போக எஞ்சியவர்களும் எந்த ஆதரவும் இன்றிச் செய்வதறியாது தவிக்கிறார்கள். அவர்களை வாழவைக்கத் தங்களால் தரப்படும் சிறுதுளி நிதியும் பெரும் உதவிபுரியும். முல்லை. மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையால்முல்லை மக்கள் துயர் துடைக்கும் நிதியம் ஒன்றை ஆரம்பித்துள்ளோம் இலங்கை வங்கி முல்லைத்தீவு e.3417 இலக்கமுடைய கணக்கு ஒவ்வொருவரின் வைப்பும் சேமிக்கப்பட்டு அல்லலுறும் மக்களின் துயர்துடைக்க ஒழுங்குகள் செய்யப்பட்டன புலம் பெயர்ந்த உறவுகளை இங்கு வாழும் எம் உறவுகளே எம் நிதிக்கணக்கின் ஊடாக உதவுங்கள் என்று அன்புடன் வேண்டுகிறோம். எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

# பங்குபற்றவும்

"சுனாமி" இயற்கை அனர்த்தத்தினால் பாதிப்புற்ற எம்முறவுகளை ஆற்றுகைப்படுத்தும் சிறப்பு வேலைத்திட்டப் பயிற்சிப் பட்டறை 07 ஆம் நாள் காலை 9.30 மணிக்கு மு/ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலையில் நடைபெறவுள்ளது. பாதிப்பு ஏற்படாத பகுதி ஆசிரியர்களுள் உளவளத்துணை பயிற்சி பெற்ற ஆசிரியர்களையும், இப் பணிசெய்ய விரும்பும் ஆசிரியர்களையும் பங்குபற்றுமாறு முல்லை வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அவர்கள் கேட்டுள்ளார். (லோ.தீ)



# காணவில்லை

இவர் முல்லைத்தீவு கள்ளப்பாட்டைச் சேர்ந்த **நாகேஸ்வரன் ஜனகன் (ஜனா)** என்பவர் 26.12.2004 அன்று முதல் காணவில்லை. வயது - 2 என்பவரைப் பெற்றோர்கள் தேடுகின்றார்கள். இவரைக் கண்டவர்கள், தெரிந்தவர்கள் யாராவது இருந்தால் புலிகளின்குரல் ஊடாக அல்லது கலியுகவரதன் கடை. புதுக்குடியிருப்பு. என்னும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தகவல்:-

(5086) **அ.நாகேஸ்வரன்.**

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பரீட்சைகள்

அண்மையில் இடம்பெற்ற அனர்த்தத்தின் காரணமாகத் தடைப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.

## உயர் கற்கைகள் பீடம்

28/12/2004ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருந்த பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி I முழுநேரம், பகுதி நேரம்) பரீட்சைகள் 10/01/2005 ஆம் திகதி தொடக்கமும், பட்டப்பின் கல்வி டிப்ளோமா பகுதி II (முழுநேரம், பகுதி நேரம்) பரீட்சைகள் 13/01/2005 ஆம் திகதியும் நடைபெறும்.

## முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம்

27/12/2004 இல் தடைப்பட்ட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் பின்வரும் ஒழுங்கில் நடைபெறும்.
27/12/2004 ஆம் திகதிய பரீட்சை 17/01/2005 இலும்
28/12/2004 ஆம் திகதிய பரீட்சை 18/01/2005 இலும்
29/12/2004 ஆம் திகதிய பரீட்சை 19/01/2005 இலும்
30/12/2004 ஆம் திகதிய பரீட்சை 20/01/2005 இலும்
31/12/2004 ஆம் திகதிய பரீட்சை 25/01/2005 இலும் நடைபெறும்

## கலைப்பீடம்

03/01/2005 ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருந்த இராமநாதன் நுண்கலைக்கழக (இசை,நடனம்,சித்திரமும் வடிவமைப்பும்) மூன்றாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகள் (மீள் பரீட்சைகள் உட்பட) 17/01/2005 ஆம் திகதி முதல் நடைபெறும்.
03/01/2005ஆம் திகதி தொடக்கம் நடைபெறவிருந்த கலைப்பீட இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டுப் பரீட்சைகளும், இராமநாதன் நுண்கலைக்கழக (இசை நடனம், சித்திரமும்,வடிவமைப்பும்) 4ஆம் வருட முதலாம் அரையாண்டுப் விசேட பரீட்சையும் 19.01.2005 ஆம் திகதி முதல் நடைபெறும்.
பரீட்சார்த்திகள் தத்தமது பீடங்களில் புதிய பரீட்சை அட்டவணைகளைப் பார்வையிடலாம்.

**துணைவேந்தர்.** 04.01.2005 (சி-11060) **யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

# பெரு நாட்டில் கிளர்ச்சி செய்த படையினர் சரணடைய முடிவு


பெருநாட்டின் தெற்குப் பகுதியில் புரட்சிக் குழுவிற் குத் தலைமை தாங்கி பொலிஸ் நிலையம் ஒன்றைக் கைப் பற்றிய நிலையில் தனது கையடக்கத் தொலைபேசியில் உரையாடிக் கொண்டிருக்கும் பெருநாட்டின் முன்னாள் இராணுவத்தளபதி அன்ராவுநோகுமாலா

(லிமா)

**பெருநாட்டில், முன்னாள் இராணுவத் தளபதி அன்ராவுநோகுமாலா தலைமையில் பொலிஸ் நிலையம் ஒன்றைக் கைப்பற்றி கிளர்ச்சியில் ஈடுபட்ட புரட்சிப் படையினர் அரசின் அறிவிப்பையடுத்து சரணடைய முடிவு செய்துள்ளனர்.**

பெரு நாட்டின் சனாதிபதியாக இருப்பவர் அலஜண்ட்ரோ டொலடோ. "ஊழல் ஆட்சி நடத்தி வரும் டொலடோ பதவி விலகவேண்டும்" என்று கோரி முன்னாள் இராணுவத் தளபதி அன்ராவுநோகுமாலா தலைமையில் திடீர் கிளர்ச்சி நடைபெற்றது.

புத்தாண்டு தினத்தன்று காலையில் ஹுமாலா ஆதரவாளர்கள் 200 பேர் ஆயுதங்களுடன் அந்தகவுலாஸ் நகரில் உள்ள பொலிஸ் நிலையத்தை முற்றுகையிட்டனர்.

அப்போது புரட்சிப் படையினருக்கும், பொலிசாருக்கும் இடையே பல மணி நேரம் துப்பாக்கிச் சண்டை நடந்தது. இதில் 4 பொலிஸ்காரர்கள் பலியானார்கள். 10 பொலிஸ்காரர்களை அவர்கள் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துக்கொண்டனர்.

பொலிஸ் நிலையத்தைப் புரட்சிப்படையினர் கைப்பற்றிக் கொண்டனர். மேலும் சில பகுதிகளையும் அவர்கள் கைப்பற்றினார்கள்.

"டொலடோ சனாதிபதி பதவியில் இருந்து விலக வேண்டும் அதுவரை நாங்கள் இங்கிருந்து செல்ல மாட்டோம்" என்று ஹுமாலா அறிவித்துள்ளார்.

இதனையடுத்து "பொலிஸ் நிலையம் அருகே உள்ள குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் அங்கிருந்து வெளியேற வேண்டும்" என்று பெருநாட்டு அரசு உத்தரவு பிறப்பித்து புரட்சிப்படையைச் சேர்ந்த 9 பேர்களைப் பிடித்து வைத்து இருப்பதாகவும், மீண்டும் தாக்குதல் நடத்தி பொலிஸ்நிலையத்தைக்கைப்பற்றப்போவதாகவும் அரசு கடுமையான தொனியில் அறிவித்துள்ளது. இதனைத் தொடர்ந்து ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு, புரட்சிப்படையினர்சரணடைய முடிவுசெய்துள்ளனர்.


அமெரிக்கக் கடற்படையின் உலங்குவானூர்தி சுனாமிபேரலையால் பாதிக்கப்பட்ட இந்தோனேசிய மக்களுக்குவழங்கவென ஒரு தொகுதி நிவாரணப் பொருட்களுடன் தரையிறங்கியுள்ளதையும், நிவாரணப் பொருட்கள் வழங்கப்படுவதையும் படத்தில் காணலாம்.

## ஈராக் பிரதமரின் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் இடம் பெற்ற கார்க் குண்டு வெடிப்பில் இருவர் பலி

(பாக்தாத்)

ஈராக் பிரதமர் இயாத் அல்லாவியின் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் நேற்றுமுன்தினம் சக்தி வாய்ந்த குண்டு வெடித்ததில் இரண்டு பேர் உடல் சிதறிப் பலியாயினர்.20 பேர் படுகாயமடைந்தனர்.

ஈராக்கில் இம்மாதம் 30ஆம் திகதி தேர்தல் நடக்கிறது. இந்தத் தேர்தல் வேலைகளை குலைப்பதற்காக சதாம் ஹுசேன் ஆதரவு கெரில்லாக்கள் பல்வேறு தாக்குதல்களில் ஈடுபட்டு வருகின்றனர். வெளிநாட்டுப் படைவீரர்கள் தங்கியுள்ள முகாம்கள் மீதும்,பொலிஸ் நிலையங்கள் மீதும் தற்கொலைப்படையினர் தாக்குதலை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பாக்தாத்தில் உள்ள ஈராக் தேசிய ஒப்பந்தக் கட்சியின் அலுவலகத்தின் வெளியே நிறுத்தப்பட்டிருந்த கார் திடீரென வெ[illegible]தது. இந்தச் சம்பவத்தில் இர[illegible] பேர் உடல் சிதறிப் பலியாயி[illegible] 20 பேர் படுகாயமடைந்தனர்.


ஈராக்கில் பிரதமர் இயத் அல்லாவியின் கட்சி அலுவலகத்திற்கு முன்னால் இடம் பெற்ற கார்க்குண்டு வெடிப்பில் தீப்பற்றி எரியும் வாகனம்.

## பன்னீராயிரம் கோடி ரூபாவை கடனாகப் பெற இந்தோனேசியா திட்டம்

(ஜகார்த்தா)

'சுனாமி' தாக்குதலில் பேரழிவுகளைச் சந்தித்த இந்தோனேசியா தனது தோழமை நாடுகளிடம் இருந்து ரூ.12 ஆயிரம் கோடியைக் கடனாகப் பெறத் திட்டமிட்டுள்ளது. இந்தத் தகவலை இந்தோனேசிய திட்ட மந்திரி முல்யானி இந்தராவதி தெரிவித்தார்.

இந்தக் கடன் தொகையில் பெரும் பகுதி கடல் கொந்தளிப்பு நிவாரணத் திட்டங்களுக்காக வரும் 2005ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படும் என்றும் அவர் கூறினார். சுனாமி நிவாரண நிதிக்கு எந்தெந்த நாடுகள் உதவி இருக்கின்றன என்ற விவரத்தை அவர் வெளியிடவில்லை.

## அமெ. சனாதிபதி வேண்டுகோள்

(வோஷிங்டன்)

ஆசியப் பிராந்தியத்தை அதிர வைத்த சுனாமி பேரலையின் அனர்த்தத்திற்கு உதவுமாறு அமெரிக்க சனாதிபதி ஜோர்ஜ் டபிள்யுபுஷ் தமது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அமெரிக்காவின் முன்னாள் சனாதிபதியும் இவ்வாறான வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## ஆர்ஜன்டீனா இரவு விடுதியில் தீ விபத்து 182 பேர் உடல் கருகிப் பலி; 726 பேர் காயம்

(பீனஸ்ஏர்ஸ்)

ஆர் ஜன்டீனா தலைநகர் பீனஸ் ஏர்ஸ் நகரில் உள்ள இரவு விடுதியில் புத்தாண்டு தினத்தன்று ஏற்பட்ட தீ விபத்தில் உடல் கருகியும், நெரிசலில் சிக்கியும் 182 பேர் பலியானார்கள்.

726 பேர் காயம் அடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இறந்தவர்களில் 90 பேரின் உடல்கள் நேற்று முன்தினம் அடக்கம் செய்யப்பட்டன.

பாதுகாப்பு விதிமுறைகளை மீறி இரவு விடுதி செயற்பட்டதாகக் குற்றம் சாட்டி வியாபாரிகள் பெரும்திரளாகக்கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். நகர மேயர் பதவிவிலகவேண்டும் என்றும் கோஷமிட்டனர்.


ஈராக்கில் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் அதிகரித்துக் காணப்படும்மொசூல் பகுதியைக் கடந்துசெல்லும் இராணுவ வாகன அணிக்குப் பாதுகாப்பளித்து நிற்கும் அமெரிக்கப்படையினர்.

## கடுமையான பனிப்பொழிவால் அமெ.இல்.போக்குவரத்துப் பாதிப்பு

அமெரிக்காவில் இப்போது கடுமையான பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. சாலைகளில் பனிப்படலம் படர்ந்து கிடப்பதால் போக்குவரத்தும் கணிசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. விமான நிலையங்களிலும் பனிப்பொழிவு காணப்படுகிறது. இதனால் விமானப் போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது.

புத்தாண்டு விடுமுறைக்காக ஊருக்குச் சென்றவர்கள் திரும்ப முடியாமல் தவிக்கிறார்கள். பாஸ்டன் விமான நிலையத்தில் பனி படர்ந்து இருப்பதால்விமானங்கள்அங்கேயே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன அங்கு நிறுத்தப்பட்ட கார்களையும் பனி மூடி இருக்கிறது.



## சுனாமி பேரழிவு குறித்துக் கலந்துரையாடல்

இந்து சமுத்திரத்தில் ஏற்பட்டகடல் பூகம்பத்தைத் தொடர்ந்து ஆசிய நாடுகளில் பேரழிவை ஏற்படுத்திய கடல் கொந்தளிப்புப் பற்றி உலகத் தலைவர்கள் நேற்றுக் கலந்துரையாடியுள்ளனர்.

பூகம்பப் பேரழிவு பற்றிய விசேட மாநாடு நாளை இந்தோனேசிய தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெறும் என்று இந்தோனேசிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்துள்ளார். இதன்போது நிதியுதவிகளை வழங்குமாறு சர்வதேச சமூகத்திடம் கோரிக்கை விடுக்கப்படும் என அவர் தெரிவித்துள்ளார்.





சுனாமி கடல் அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டு பளை தர்மக்கேணி அ.த.க பாடசாலையில் இயங்கி வரும் நலன்புரி நிலையத்தில் தங்கியுள்ள மக்களுக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் உதவிகள் வழங்குவதையும் தங்கியுள்ள மக்களையும் படங்களில் காணலாம். (படம்- சோதி)

# அரச உதவிகள் எதுவும் கிட்டவில்லை பொது அமைப்புகளே உதவுகின்றன

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் தயானந்தா

(புதுக்குடியிருப்பு)

**"சுனாமி" கடல் அனர்த்தத்தால் பாதிப்புக்குள்ளான குடும்பங்களுக்கான உதவியினை இது வரையும் பொது அமைப்புக்களும், தொண்டர் நிறுவனங்களும், பொது மக்களுமே வழங்கியுள்ளதாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் செ.தயானந்தா தெரிவித்துள்ளார்.**

இது வரையும் அரசாங்கத்திட மிருந்து உதவிகள் ஏதும் தமது பிரிவுக்குக் கிட்டவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ் அனர்த்தத்தால் பலியான குடும்பங்களுக்கு 02.01.2005 அன்று 2000ரூபா வீதம் புதுக்குடியிருப்பு பிர தேச செயலர் பணிமனையில் வைத்து வழங்கப்பட்டது.

இதேவேளை நிவாரணப் பொருட்களை வழங்குவதிலிருந்து, முகாம்களைப் பராமரித்து வரும் சகல விடயங்களிலும் விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள், செஞ்சிலுவைச்சங்கத் தொண்டர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தொண்டர்கள், கிராம சேவையாளர்கள், அரச ஊழியர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுமக்கள், உள்ளூர் தொண்டு நிறுவனங்களின் ஊழியர்கள் என சகல தரப்பினரும் மிகுந்த அர்ப்பணிப்புடன் இரவு பகல் பார்க்காது சேவையில் ஈடுபட்டு வருவதை அவதானிக்க முடிகின்றது. இதே வேளை வைத்தியர்களும் இச் சேவையில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றனர். (08)

# மீட்பு நடவடிக்கைகளுக்கு உதவ ஆசிரியர் குழு அம்பாறை பயணம்

(அலுவலக செய்தியாளர்)

கடற் புவி நடுக்கத்தால் பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட மக்களுக்கு உதவும் முகமாகவும் மீட்பு நடவடிக்கை மேற்கொள்ளும் முகமாகவும் வன்னி, வவுனியா மாவட்டங்களில் இருந்து 60இற்கும் அதிகமான ஆசிரியர்கள் தமிழீழக் கல்விக்கழகத்தின் ஏற்பாட்டில் அம்பாறை சென்றுள்ளனர்.

கடந்த 31 ஆம் திகதி கிளி, முல்லை, வவுனியா மாவட்டங்களில் இருந்து அறுபது பேர் அடங்கிய ஆசிரியர் குழுவினரும் வவுனியா கல்விச் சமூகத்தால் சேகரிக்கப்பட்ட பொருட்கள் இரண்டு பார ஊர்திகளிலும் அம்பாறைக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

வன்னிக் கல்விக் கழகப் பொறுப்பாளர் ஞானம் தலைமையில் புறப்பட்டுச் சென்றுள்ள இந்த அணி அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு, நாவிதன் வெளி ஆகிய பகுதிகளில் தமது மீட்பு வேலைத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

கடல் பெருக்கால் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ள அம்பாறை மாவட்டத்தில் மீட்பு நடவடிக்கை உட்பட்ட பல்வேறு நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளாத நிலையில் அங்குள்ள மக்களுக்கு உதவும் முகமாகவே மீட்பு அணி சென்றுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது. (லோ.தீ)

# "சுனாமி" யால் இலங்கையில் 12,000 சிறார்கள் உயிரிழப்பு

## - யுனிசெப் அறிக்கை தெரிவிப்பு

சுனாமி அலைகளின் தாக்கத்தில் 12,000 சிறுவர்கள் இலங்கையில் உயிரிழந்துள்ளதாக யுனிசெப் அறிவித்துள்ளது. இலங்கையில் உயிரிழந்தவர்களில் 40 சதவீதமானவர்கள் சிறுவர்கள் என்றும், இவர்களில் பெரும்பாலானவர்களை கடலலைகள் அடித்துச் சென்றுள்ளதாகவும் மேலும் பலர் பெற்றோர் மற்றும் உறவினர்களால் அடையாளம் காணப்படாமலேயே அடக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் யுனிசெப் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.(32)

# 'சுனாமி' அனர்த்தத்தில் மரணமடைந்த மக்களை நோர்வேயில் நினைவு கூரல்

ஆழிப்பேரலையின் அனர்த்தத்தினால் காவு கொள்ளப்பட்ட மக்களை நினைவுகூர்ந்து அகவணக்கம் செலுத்தப்பட்டு, துயர் பகிர்வதற்கான ஒன்றுகூடல் கடந்த ஞாயிறன்று மாலை 4 மணிக்கு ஒஸ்லோவில் நடைபெற்றது.



தமிழர் ஒருங்கிணைப்பு குழு, தமிழர் புனர்வாழ்வுக் கழகம், தமிழர் வள ஆலோசனை மையம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்த இவ் ஒன்றுகூடல் அன்னை பூபதி தமிழ் கலைக்கூட றொம்மன் வளாகத்தில் இடம்பெற்றது. நோர்வேஜிய மக்கள் உட்பட பெருந்திரளான தமிழ் மக்கள் இவ் ஒன்றுகூடலில் பங்கேற்றிருந்தனர்.

இத்துயர் பகிர்வு ஒன்றுகூடலில் நோர்வேயின் பிரதான அரசியல் கட்சிகளான தொழிலாளர் கட்சித் தலைவர் ஜென்ஸ் ஸ்தொல்த்தன்பேர்க், சோசலிச இடதுசாரிக்கட்சித் தலைவர் கிறிஸ்ரின் கர்ல்வோர்சன், சிறப்பு சமாதானத் தூதுவர் எரிக் சூல்ஹெய்ம், நோர்வே நீதி-காவற்துறை அமைச் சர் ஜனார் டோரும் மற்றும் ஒஸ்லோ நகரசபைத் தலைவர் ஆர்லிங் லா ஆகியோர் நோர்வே அரசாங்கத்தின் பிரதிநிதிகளாகக் கலந்து கொண்டிருந்தனர்.

ஆழிப்பேரலையின் அனர்த்தத்தால் பலியாகிப் போன மக்களை நினைவுகூர்ந்த நோர்வே அரச பிரதிநிதிகள், உறவுகளை இழந்து தவிக்கும் தமிழ் மக்களின் ஆழ்ந்த துயரில் உணர்வோடு பங்கெடுத்துக் கொள்வதாகத் தெரிவித்தனர். அத்தோடு இயற்கை பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேச மக்களின் புனர்வாழ்வு, மீள்கட்டமைப்பு பணிகளுக்கு நோர்வே தன்னாலான உதவிகளை வழங்கும் என்றும் உறுதி கூறியிருந்தனர்.

இத்துயர் பகிர்வு ஒன்றுகூடலில், பேரலையின் கோரத்தினால் உயிர் நீர்த்த மக்களின் ஆத்ம ஈடேற்றத்திற்காக சுடரேற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நோர்வே அரச பிரதிநிதிகளின் உணர்வு பகிர்வும், தமிழ் சர்வமத குருமார் மற்றும் தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் உணர்வுப் பகிர்வும் இடம்பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

# சுனாமி அனர்த்தத்தால் இடம் பெயர்ந்தோரில் சிறார்களின் தொகை வெகுவாககுறைவு

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி அலைத்தாக்கத்திற்குள்ளான முல்லை நகர்ப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த மக்களின் புள்ளி விபரங்களின் படி சிறுவர்களின் எண்ணிக்கை மிகக் குறைந்தே காணப்படுவதாக செயலணிக்குழுவினர் தெரிவிக்கின்றனர்.

மேற்படி அலையின் தாக்கத்திற்குள்ளாகி முற்றாக அழிவுற்றுள்ள முல்லைத்தீவு நகரின் மக்கள் தங்கியுள்ள பல் வேறு நலன்புரி நிலையங்களிலும் முல்லைத் தீவு இடம் பெயர்ந்தோர் நலன் காப்புப் பணியில் ஈடுபட்டுள்ள விசேட செயலணிக்குழுவினர் மக்கள் தொகை விபரங்களை திரட்டி வருகின்றனர். இத்தரவுகளின் படி முல்லை நகர் அழிவுக்கு முன்னர் இருந்த சிறுவர்களின் எண்ணிக்கையை விட தற்போதுள்ள சிறுவர்களின் எண்ணிக்கை மிகக்குறைவாகவே உள்ளது. இதனடிப்படையில் ஒருவயதிற்குட்பட்ட குழந்தைகள் முல்லைத்தீவின் 8 நலன்புரி நிலையங்களிலும் 243 பேரே உள்ளனர். இது போன்று ஒன்று தொடக்கம் ஐந்து வயதிற்குட்பட்டவர்கள் 861பேரும், ஐந்து தொடக்கம் 10 வயதிற்குட்பட்டவர்கள் 1264 பேருமே உள்ளனர்.

இடிபாடுகளுக்குள்ளிருந்தும் ஏனைய பகுதிகளிலிருந்தும் மீட்கப்பட்ட சடலங்களில் பெருந்தொகையானவை சிறுவர்களின் உடல்களாகவே காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (ச,கு)

# கனடாவிலுள்ள குமுழமுனை மக்கள் பாதிப்புற்றோருக்கு உதவியளிப்பு

(முல்லை)

முல்லைத்தீவில் கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கனடாவில் வசிக்கும் குமுழமுனை மக்கள் உதவி வழங்கியுள்ளனர்.

கனடாவில் வசிக்கும் குமுழமுனை மக்கள் இரண்டு இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து நானூற்றி நான்கு ரூபா பணத்தினை பாதிக்கப்பட்டு குமுழமுனைப் பாடசாலையில் தஞ்சமடைந்துள்ள மக்களுக்கு குமுழமுனை யாழ். பல்கலைக்கழக மாணவர்களூடாக அனுப்பி வைத்துள்ளனர்.

பல்கலைக்கழக மாணவர்களினால் அந்தந்தப் பகுதி கிராம அலுவலர், அரசியல் துறையினர், கிராம அமைப்புக்கள் ஆகிய பிரதிநிதிகளிடம் இப்பணம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (20)

# இலவச சேவை

(அலுவலக செய்தியாளர்)

சுனாமி கடல் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கிளி மாவட்ட வைத்தியசாலையில் சிகிச்சை மேற் கொண்டு வரும் நோயாளர்களுக்கு கிளி.மாவட்ட அழககக சங்கத்தினரால் இலவசமாக சிகையலங்காரப் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது (சோ)

# வட்டுவாகல் கடல்நீரேரியில் தூய்மைப்படுத்தும் பணி ஆரம்பம்

(முல்லை)

வட்டுவாகல் கடல் நீரேரியில் உள்ள குப்பை கூழங்களை அகற்றும் பணி கடந்த சனிக்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

முல்லைத்தீவு மக்களின் வாழ்வியலை மேம்படுத்தும் இந்த கடல்நீரேரியில் மார்ச் மாதத்திலிருந்து இறால் பிடிபடும் காலம் அதனாலேயே இப்பணி உடனடியாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வட்டுவாகல் கிராம மக்களும் கடற்புலிகளும் இணைந்து இந்த துப்புரவுப் பணியில் ஈடுபட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (20)

# உண்ணா பிலவிலிருந்து நாயாறுவரை மக்களை குடியமர்த்த முயற்சி

(முல்லை)

முல்லை தெற்கு உண்ணாபிலவுக் கிராமத்திலிருந்து நாயாறு வரையான மக்களை குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகளை கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல் துறையினரும், கிராம அலுவலர்களும், கரைதுறைப்பற்று உதவி அரச அதிபரும் இணைந்து எடுத்து வருகின்றார்கள். இவர்களுக்கான குடிநீர் வசதிக்காக தண்ணீர் தாங்கிகள் நிறுத்தி வைப்பதற்கான இடங்களை தெரிவு செய்வதில் கிராம மக்களும், கடற்புலிகளும், கிராம அலுவலர்களும் இணைந்து செயற்பட்டு வருகின்றனர். (20)

# வடமராட்சியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்கள் குடியிருப்பில் எஞ்சிய பகுதியைக் கழற்றி படையினர் முகாம் அமைக்கின்றனர்

### மீனவர் சங்கத்தின் முறைப்பாட்டையடுத்து மனித உரிமை ஆணைக்குழு விசாரணை

(வடமராட்சி)

**வடமராட்சிப் பகுதி கரையோரங்களில் சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வீடுகளில் எஞ்சியுள்ள கூரைத் தகடுகள், மரங்கள் போன்றவற்றை சிறிலங்காப் படையினர் கழற்றி எடுத்து அழிந்த தமது முகாம்களைப் புதுப்பிக்கும் நடவடிக்கையிலீடுபட்டு வருகின்றனர்.**

படையினரின் இந்த மோசமான செயல் குறித்து வல்வெட்டித்துறை மீனவர் சங்கம் தமது கடுமையான கண்டனத்தை தெரிவித்திருந்ததோடு மனித உரிமைகள் ஆணைக் குழுவிடமும் முறையிட்டிருந்தது.

இதனையடுத்து வல்வெட்டித்துறைப் பகுதிக்குச் சென்ற மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் மீனவர்களைச் சந்தித்து உரையாடியதுடன் கரையோரப் பகுதிகளையும் பார்வையிட்டிருந்தனர்.

வடக்கின் வல்வெட்டித்துறை முதல் வடமராட்சி கிழக்கின் பொற்பதிப் பகுதி வரையான கரையோரப்பகுதிகளில் இராணுவம் முழு வீச்சில் இராணுவ முகாம்களை அமைத்து வருகின்றது. அத்துடன் கடற்கொந்தளிப்பினால் அழிவுற்ற காவலரண்களையும் மீளப் படைத்தரப்பு கட்டி வருகின்றது.

இதற்கேதுவாக கரையோரப் பகுதியிலிருந்து தற்போது இடம்பெயர்ந்துள்ள மக்களது நிலப்பகுதிகளை ஆக்கிரமித்து வரும் படைத்தரப்பு வீடுகளில் இருந்து கழற்றப்படும் யன்னல்கள் மற்றும் கதவுகள் கூரைத் தகடுகளை எடுத்துச் சென்றே முகாம்கள் மற்றும் காவலரண்களை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருக்கின்றது. அத்துடன் கடற்கரையோரப் பகுதிகளை படைத்தரப்பு துரிதமாக ஆக்கிரமித்திருப்பதால் பழுதடைந்த நிலையில் எஞ்சியுள்ள தமது படகுகளைக் கூடத் திருத்த முடியாமல் இருப்பதாக தெரிவித்திருந்ததையடுத்தே ஆணைக்குழு அதிகாரிகள் நேற்று முன்தினம் அங்கு நேரில் விஜயம் செய்து பார்வையிட்டிருந்தனர்.

இதே வேளை இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த முகாம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டமை மற்றும் கரையோரப்பகுதிகளில் படைத்தரப்பினால் இராணுவ முகாம்கள் மற்றும் இராணுவக் காவலரண்கள் அமைக்கப்படுகின்றமை தொடர்பான குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அதிகாரிகள் சம்பவ இடங்களிற்கு நேரில் விஜயம் செய்து நேற்று முன்தினம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

வடமராட்சி கிழக்கின் கரையோரக்கிராமமான பொற்பதிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருந்த குடத்தனை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையே தீக்கிரையாக்கப்பட்டிருந்தது படையினரே இடம்பெயர்ந்திருந்த அகதிகள் மீது தாக்குதலை நடத்திய பின்னர் முகாமைத் தீயிட்டதாகக் குற்றம் சாட்டப்பட்ட நிலையில் ஆணைக் குழுவின் யாழ். அலுவலகத்தைச் சேர்ந்த விசாரணைக்குழுவொன்று அங்கு நேரடியாகச் சென்று பாதிக்கப்பட்ட மக்களிடையே விசாரணைகளை நடத்தியுள்ளது. (27)

## சுனாமியால் உயிரிழந்த மக்களுக்காக யாழ்.இல் திருப்பலி பூசை ஒப்புக் கொடுப்பு

(வடமராட்சி)

கடற் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள குடாநாட்டின் கரையோரப்பகுதி மக்களிற்கு இறை ஆசிவேண்டியும், உயிரிழந்த பொது மக்களினது ஆத்மா சாந்தியடைய வேண்டியும் குடாநாட்டிலுள்ள கிறிஸ்தவ தேவாலயங்கள் அனைத்திலும் நேற்று முன்தினம் திருப்பலிப் பூசைகள் இடம் பெற்றது.

குறிப்பாக பெரும் கடற்கொந்தளிப்பினால் பல உயிர்கள் காவு கொள்ளப்பட்ட மணற்காட்டின் குடத்தனைப்பகுதியிலுள்ள தேவாலயத்தில் விசேட திருப்பலி பூசைகள் இடம் பெற்றிருந்தது. இடம் பெயர்ந்து தேவாலயப்பகுதியிலும் அதனை அண்டியுள்ள பிரதேசங்களிலும் குடியமர்ந்துள்ள நூற்றுக்கணக்கான குடும்பங்கள் இத்திருப்பலிப் பூசையில் கலந்து கொண்டிருந்தனர்.

இதனிடையே புத்தாண்டு தினத்தன்று வழமைக்கு மாறாக அமைதியான சூழலே குடாநாட்டில் நிலவியது பட்டாசுவெடிகள் குடாநாட்டில் கேட்கவில்லை. கிறிஸ்தவ மக்கள் அமைதியான முறையில் தேவாலயங்களிற்கு சென்று பிரார்த்தனையில் ஈடுபட்டனர். கேளிக்கை நிகழ்வுகளேதும் இடம் பெற்றிருக்கவில்லை. (27)

## விலை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

"சுனாமி" கடற்பேரலையின் தாக்கங்களினால் இடம்பெயர்ந்துள்ள மக்கள் தற்காலிகமாகத் தங்கியுள்ள பகுதியில் பாணுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதனால் அலைத்தாக்கங்களால் இடம் பெயர்ந்து யாழ். குடாநாட்டில் உள்ள அகதி முகாம்களிலும் தற்காலிகமான வாழ்விடங்களிலும் தங்கியுள்ள மக்கள் தமது அன்றாட உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு பாணினைப் பெற்றுக் கொள்ள முடியாது அல்லற்படுகின்றனர்.

அத்துடன் இடம் பெயர்ந்தோர் அதிகமாகத் தங்கியுள்ள பிரதேசங்களில் உள்ள வர்த்தக நிலையங்கள் சிலவற்றில் அத்தியாவசியப் பொருட்களின் விலை அதிகரிக்கப்பட்டு விற்பனை செய்யப்படுவதாக குறை கூறும் மக்கள் இவற்றை நீக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (33)

## யாழ்.கரையோரப் பிரதேசங்களில் சடலங்களை மீட்கும் பணி தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கபட்டுள்ள பகுதிகளில் மீட்புப் பணிகள் தொடர்ந்தும் இடம்பெற்று வருகின்றன.

யாழ். குடாநாட்டின் பல்வேறு கரையோரப் பிரதேசங்களிலும் ஏற்பட்ட கடற்கொந்தளிப்பு மற்றும் இயற்கை அனர்த்தங்களால் சுமார் 2ஆயிரத்து 500இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்திருப்பதாக அஞ்சப்படுகின்றது. எனினும் இவ்வாறு உயிரிழந்தோரில் இதுவரையில் குறிப்பிட்டளவிலானோரது சடலங்களே மீட்கப்பட்டுள்ளன.

இந் நிலையில் இக் கடல் அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கட்டட சிதைவுகள், மணற் திட்டிகள் என்பனவற்றுள் சிக்குண்டு பலியானோரது சடலங்களை மீட்கும் பணிகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன. யாழ். வடமராட்சியின் கடற்கரையோரப் பிரதேசம் எங்கிலும் சகிக்க முடியாத பிண வாடை வீசுகின்றது.

இடிபாடுகளுள் இன்னமும் நூற்றுக்கணக்கான சடலங்கள் சிக்கிக் கொண்டுள்ளன. இவ்வாறு சிக்கிக்கொண்டுள்ள சடலங்களே வாடை வீசத்தொடங்கி அப்பகுதிகளில் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இம் மீட்புப் பணிகளில் தமிழீழ விடுதலைப்புலிகளின் உறுப்பினர்கள், போராளிகள் பல்கலைக்கழக மாணவர்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் கூட்டமைப்பினர் தேசிய எழுச்சிப் பேரவையினர் எனப் பலரும் ஈடுபட்டுள்ளனர்.(33)

## காரைநகர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் 15 வயது பெண்ஒருவர் மீது பாலியல் வல்லுறவு

(தீவகம்)

காரைநகர் பிரதேச சபை ஊழியர் ஒருவர் பதினைந்து வயது இளம் பெண் ஒருவரை வலுக்கட்டாயமாக பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தியுள்ளதாக தெரியவருகிறது.

55 வயதைக் கடந்து விட்ட காரைநகர் பிரதேச சபை ஊழியரான இவரைப் பொலிசார் தீவிர விசாரணை நடத்தியதுடன் ஊர்காவல்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு இவரை சிறையில் அடைத்துள்ளனர். இவர் தற்போது யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டுள்ளதாகத் தெரியவருகிறது. (28)

## முன்னாள் அரச அதிபரின் செயற்பாட்டில் கடற்றொழிலாளர் சமாசம் அதிருப்தி

(நல்லூர்)

யாழ்.மாவட்டத்தின் முன்னாள் அரசாங்க அதிபரின் செயற்பாடு பற்றி வடமராட்சி கடற்றொழிலாளர்களின் சமாச உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கடந்த 30 ஆம் திகதி சுனாமி கடல் அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக இலவச உலர்உணவு நிவாரணம் வழங்குவதாகப் பாதிக்கப்பட்ட மக்களுடனான கலந்துரையாடலின் போது முன்னைய அரசாங்க அதிபரும், திட்டப் பணிப்பாளரும் கூறிய போதிலும் நேற்றைய தினம் வரை பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தாமையைத் தொடர்ந்தே கண்டனம் செய்யப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நெல்லியடியில் அமைந்துள்ள பாதிக்கப்பட்ட மக்களின் வேலைகள் சம்பந்தமாக இடம் பெற்ற கலந்துரையாடலில் கலந்து கொண்ட மேலதிக அரசாங்க அதிபர் மற்றும் பிரதேச செயலாளர்கள் இவர்களின் கடும் கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளனர்.

இதே நேரம் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி பிரதேச செயலாளர்கள் தமக்கு நிவாரணப் பொருட்கள் வழங்குவதற்கான அறிவுறுத்தல் கிடைக்கவில்லையெனவும் இக் கலந்துரையாடலில் தெரிவித்தனர். மேலதிக அரச அதிபரும் கூட இவ்விடயம் சம்பந்தமாகத் தெளிவான முடிவைக் கூறாது இழுத்தடித்துப் பதில்களைக் கூறுவது கண்டனத்திற்கு உள்ளாகியுள்ளது.

### தொற்று நோய் அபாயம்

(நல்லூர்)

வடமராட்சியில் சுனாமிகடல் அனர்த்தம் காரணமாக நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டுள்ள மக்கள் சின்னமுத்து, வயிற்றோட்டம் போன்ற தொற்று நோய்களுக்கு சுகாதார சீர்கேடுகள் காரணமாக முகம் கொடுக்க வேண்டிய அபாய நிலையை எதிர்நோக்கியுள்ளதாக வடமராட்சி சுகாதார வைத்திய அதிகாரி எச்சரித்துள்ளார். இடம்பெயர்ந்து மக்கள் தங்கியுள்ள முகாம்களில் போதியளவிலான மலசல கூடவசதிகள் இல்லாது இருப்பதுடன் இருக்கும் மல சல கூடத்தையும் உரிய முறையில் மக்கள் பயன்படுத்துவதில்லை இதேநேரம் பயன்படுத்தப்படும் மலசல கூடவசதிகள் இல்லையெனவும் அவர் கூறினார்.(41)

## "சுனாமி" அனர்த்த சுகாதார ஒருங்கிணைப்புக் குழு அமைப்பு

(யாழ்ப்பாணம்)

அரச சுகாதார திணைக்களத்தையும், தமிழீழ சுகாதார சேவையையும் ஒருங்கிணைத்து, பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தலைமையில் 'சுனாமி' அனர்த்த சுகாதார ஒருங்கிணைப்புக் குழு யாழ்.இல் உருவாக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் செயற்பாட்டாளர்களாக வைத்திய கலாநிதி சந்திரசேகரர், சொலமன், பல்கலைக்கழக சமுதாய மருத்துவத்துறை விரிவுரையாளர் வைத்தியகலாநிதி இ. சுரேந்திரகுமார் மற்றும் தமிழீழ சுகாதார சேவைகள் யாழ். மாவட்ட இணைப்பாளர் செ. குணாளன் ஆகியோர் இடம் பெறுகின்றனர். இக்குழுவிற்கு ஆலோசகர்களாக பேராசிரியர் தயா சோமசுந்தரம், பேராசிரியர் ப.சிவராசா, யாழ். போதனா வைத்தியசாலை பணிப்பாளர் என். ரவிராஜ் ஆகியோரும் நிறுவனங்கள் சார்பில் யுனிசெவ் பிரதிநிதி சிறீஸ்கந்தராசா இடம்பெறுகின்றனர். இக்குழுவின் செயற்பாடுகளாக அனர்த்த காலப் பகுதியில் செயற்படுத்தப்படுகின்ற சுகாதார மருத்துவ வசதிகளை கண்காணித்தலும்,அதேவேளை, சகல சுகாதார மருத்துவ நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துதல் அத்துடன் இணைந்ததாக பொது இடங்களில் சுகாதார மருத்துவ வசதிகளை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கைகளை ஒருங்கிணைத்து, ஒழுங்குபடுத்தி, மீளக் குடியமரும் மக்களுக்கும், முகாம்களிலுள்ள மக்களுக்கும் உரிய சுகாதார வசதிகளை ஏற்படுத்தி கொடுப்பதாகும். எதிர்காலத்தில் யாழ். மாவட்டத்தில் பணியாற்றும், பணியாற்ற விரும்பும் சுகாதார சேவை நிறுவனங்கள் அனைத்தும் இந்த செயற்குழு ஊடாக செயற்படுமாறு செயற்குழு கேட்டுக் கொள்கின்றது. இச்செயற்குழுவின் தலைமைச் செயலம், நெல்லியடிச் சந்தியில் இயங்கும்.

## சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்குதவ கைதடியில் தே.எ. பேரவை அலுவலகம் திறப்பு

(தென்மராட்சி)

கடற் கொந்தளிப்பால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் முகமாக கைதடியில் தேசிய எழுச்சிப் பேரவையால் அவசரகால துயர்துடைப்பு அலுவலகம் நேற்று முன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

இது குறித்து கருத்துத் தெரிவித்த கைதடிப்பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையின் செயலாளர் தீபன் அவர்கள் பாதிக்கப்பட்டுள்ள எமது மக்களுக்கு இப்பிரதேச மக்கள் உதவிகளை வாரிவழங்கி வருவதுடன் இன்னும் அதிகமாக உங்களுடைய பங்களிப்பை வழங்கி துயருற்று நலன்புரிநிலையங்களில் வாழும் எமது சகோதரர்களுக்கு உதவி புரியும் படியும் உலருணவு, நல்ல நிலையிலுள்ள உடுபுடவைகள், நிதியுதவிகள் வழங்கும் படியும் இவற்றை நேரில் வந்து அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கு வசதியாக கைதடி பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்கு அருகாமையில் இப்புதிய அலுவலகம் திறந்து வைக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். (28)

# பாதிப்புற்ற எம் மக்களை அரசின் உதவிகள் எட்டவில்லை

# உதவிகள் கிடைப்பதைத் தடுப்பதிலே அதிக அக்கறை!

## -அவுஸ்திரேலிய தமிழ் வானொலிக்கு திருமலை கட்டளைத் தளபதி சொர்ணம்



**"இயற்கை அனர்த்தத்தால் பாதிப்புற்ற பகுதிகளையும் அம்மக்களையும் சிறிலங்கா அரசின் எந்தவித உதவிகளும் எட்டவில்லை. அதேசமயம் கிடைக்கும் உதவிகளைத் தடுக்கும் முயற்சிகள் தான் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன" இவ்வாறு திருமலை மாவட்ட கட்டளைத் தளபதி கேணல் சொர்ணம் தெரிவித்தார். அவுஸ்திரேலிய தமிழ் வானொலிக்கு அவர் நேற்று முன் தினம் அளித்த செவ்வியில் தெரிவித்துள்ளதாவது ;**

☐ கிழக்கு மாகாணம் எனும் பொழுது திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை உள்ளடங்கலாக தமிழ், முஸ்லிம், சிங்கள சமூகங்கள் பாதிப்புக்குள்ளானாலும் தமிழர்கள் தரப்பிலும் முஸ்லிம்கள் தரப்பிலுமே கூடுதலான சேதம் ஏற்பட்டதனால் கிழக்கு மாகாண மக்கள் பெரும் துயரத்தில் மூழ்கியுள்ளார்கள். இருப்பினும் திருகோணமலையைப் பொறுத்தவரை நிலாவெளி, பத்தாம் குறிச்சி பகுதிகளிலும் தமிழ் மக்கள் பெரும்பாலானோர் இடம்பெயர்ந்தும், பெருந்தொகையான சொத்து இழப்புக்களையும் சந்தித்துள்ளார்கள். அதுமட்டுமன்றி திருமலை மாவட்டத்தில் எமது கட்டுப்பாட்டுப் பகுதியான கிழக்குக்குப் பகுதியின் மூதூர் பகுதியில் கொட்டியாரக்கடல் என்று சொல்லப்படுகின்ற இடத்தில் இலக்கந்தை, கடற்கரைச்சேனை, இலங்கை முகத்துவாரம், வெருகல் இவற்றோடு மட்டக்களப்புக் கிராமங்களான வாகரை, கதிரவெளி ஆகிய பகுதிகளில் கூடுதலான பாதிப்புக்கள் ஏற்பட்டிருக்கின்றன. அதிலும் குறிப்பாக வாகரைப் பிரதேசம் மேலும் அதிகளவான பாதிப்புக்களைச் சந்தித்திருக்கின்றது. இங்கு இன்று அதிகளவான மக்கள் வீடுகளை இழந்து பாடசாலைகளை இழந்து, மருத்துவக்கட்டடங்களை இழந்து, இருப்பதற்குக் கூட இடமில்லாமல் காடுகளில் தஞ்சமடைந்திருக்கின்ற நிலை தோன்றியுள்ளது. இவர்களுக்கு நிவாரணங்களை அரசசார்பற்ற நிறுவனங்களும் தனியார் நிறுவன உரிமையாளர்களுமே கூடுதலாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள் அதிலும் வெளிநாடுகளில் இயங்குகின்ற சில அமைப்புக்கள் அதிலும் குறிப்பாக அவுஸ்திரேலியாவில் இருக்கின்ற அமைப்புக்கள் தமது மருத்துவர்களையும் அனுப்பியுள்ளதோடு தேவையான மருந்துகளையும் அனுப்பியுள்ளார்கள். இவை தவிர இப்பகுதிகளில் அரசாங்கத்தினுடைய எந்தவொரு வேலைத்திட்டங்களும் நடைபெறவில்லை. விடுதலைப்புலிகளும், மக்களும் இணைந்துதான் இந்தப் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிகளை முன்னெடுத்துச் செல்கின்றனர். ஆனால் சிலவேளைகளில் அரசசார்பற்ற நிறுவனங்களால் வரவுள்ள உதவிகளைக்கூட சிங்கள இராணுவமும், சிங்கள அமைப்புக்களும் இணைந்துதடுத்து நிறுத்தும் அல்லது சிங்களப்பிரதேசத்திற்கு அவற்றை எடுத்துச் செல்லமுற்படும் நிலைகூட இங்கு இருந்து வந்தது. அப்போது அப்பிரச்சினைகளை எங்களுடைய திருகோணமலை அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலனுக்கூடாக அரசஉத்தியோகத்தர்கள் சிறிலங்கா இராணுவத் தளபதிகள் ஆகியோருடன் கதைத்தும் அவற்றைச் சுமூகமான நிலைக்குக் கொண்டுவந்துள்ளோம். இருப்பினும் இன்று கிழக்குமாகாணத்தில் எமது மக்களில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையினருடைய அடிப்படைத்தேவைகள் பூர்த்தி செய்யப்படாமலிருக்கின்றன. இவ் அனர்த்தத்தில் கடற்றொழிலில் ஈடுபட்டு வந்த கிராமங்களே பெரும்பாதிப்பைச் சந்திக கின்றன. ஆகவே இக்கிராமங்களின் மக்களை நாங்கள்பழைய நிலைக்குக் கொண்டு வருவதாக இருந்தால் அந்த மக்களுக்குரிய தொழில்வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம்தான் சாதாரண வாழ்விற்கு அவர்களை மீண்டும் கொண்டு செல்ல முடியும். நாங்கள் இப்போது நிவாரணங்களைக் கொடுத்தாலும் எவ்வளவு காலத்திற்குஎம்மால் தொடர்ந்து கொடுக்க முடியுமென்பது கேள்விக்குறியாகவே இருக்கின்றது.

**♦ உயிருடன் இருப்பவர்களை மீட்பதும் இறந் தவர்களின் உடல்களை மீட்பது மற்றும் ஏனைய மீட்புப்பணிகளிலும் மக்களை மீள இயல்பு வாழ்க்கைக்குக் கொண்டு செல்வதிலும் உங்களது பங்கு எவ்வாறுள்ளது?**

குறிப்பாக அனர்த்தங்கள் நடைபெற்ற காலத் திற்குப் பிறகு பாதிப்படைந்தவர்களை மீட்டு முகாம்களில் வைத்து பராமரிப்பதோடு இறந்தவர்களைத் தகனம் செய்தும் வருகின்றோம். இவ்வாறு இருப்பினும் இறந்தவர்கள் அல்லது காணாமல்போனவர்கள் என கருதப்படுபவர்கள் சிலரை சில இடங்களில் நாம் தேடிக்கண்டுபிடிக்கக் கூடியதாக உள்ளது. உதாரணமாக இப்பகுதியில் கடலுக்குள் உள்ள பகுதிகளில் நீண்டிருக்கும் தரைப் பகுதியில் இருக்கும் மக்களையும் உடல்களையும் மீட்பதில் தான் சில தாமதங்கள் ஏற்படுகின்றன.

**♦ மீட்கப்பட்டவர்களுக்கான மருத்துவப் பணிகளில் மருத்துவ சேவையினர் எவ்வாறு செயற்படுகிறார்கள்?**

ஒவ்வொரு முகாம்களிலும் விடுதலைப் புலிகளினுடைய மருத்துவப்பிரிவினர் நிலையங்களை அமைத்து அதற்கூடாக வெளிநாடுகளில் இருந்து வரும் மருத்துவர்களின் உதவியோடு வைத்திய சேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர்.

**♦ வெளிநாட்டு வைத்தியர்கள் எனக் குறிப்பிடும் போது புலம் பெயர்ந்து அங்கு வாழும் வைத்தியர்களா? அல்லது வெளிநாட்டவரா?**

வெளிநாடுகளில் இருந்து எங்களை சார்ந்தவர்களின் செயற்பாடுகளினூடாகவே இதில் ஈடுபட்டு வருகின்றோம்

**♦. மக்களை மீளக்குடியமர்த்து வதற்கான வேலைகளும், உணவுகளும் எவ்வாறு ஒழுங்கமைக்கப்பட்டிருக்கின்றன.?**

உடனடியாக அவர்களின் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கான ஏதுவான நிலை இல்லை. ஏனெனில் அவர்களின் வீடு கள் எதுவுமே இல்லை. குடிநீர் கூட உப்பாகக் காணப்படுகிறது. விலங்குகள் பறவைகள் எல்லாம் இறந்து அப்பகுதி மாசடைந்தே காணப்படுகிறது. மலசல கூடம் அனைத்தும் உடைந்து சுகாதார சீர்கேடாகவே காணப்படுகிறது. ஆகவே அந்த இடங்களில் மீளக் குடியமர்த்துவதானால் நல்ல சுகாதார சூழலை உருவாக்க வேண்டும் அதன்பின்பு தான் குடியமர்த்தமுடியும்.

**♦ அப்படியானால் மக்கள் நீண்ட நாட்களுக்கு அகதி முகாம்களில் வாழ வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதா?**

நிச்சயமாக அப்படித்தான் உள்ளது.

**♦.அப்படியானால் அவர்களுக்குரிய நிதி மற்றும் பொருட்களை எவ்வாறு பெற்றுக் கொள்கிறீர்கள்?**

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திற் கூடாகவும், வெண்புறா அமைப்பிற்கூடாகவும் மற்றும் தமிழ் அமைப்புகளுக்கூடாகவும் வருகின்ற நிதிகள், பொருட்களை வைத்துத் தான இவ்வேலைகளை முன்னெடுத்து வருகின்றோம்.

**♦. கிழக்கு மாகாணம் புறக்கணிக்கப் பட்டுள்ளதாக சிலர் கூறுகின்றனர். அது பற்றிய உங்கள் கருத்து என்ன?**

தமிழர் புனர்வாழ்வுக் கழக பிரதிநிதிகள் நேரடியாகத் தாமே நின்று செய்கிறார்கள் அது வதந்தியாகவே அமையுமென நினைக்கிறேன் ஏனென்றால் நான் அண்மையில் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதிகளை பார்வையிட்ட போது அங்கு புனர்வாழ்வுக் கழகத்தினருடைய பிரதிநிதிகள் நின்றுசெயற்பட்டதும் நான் ஆலோசனை கூறியதும் உண்டு.

**♦. அரசினால் மருத்துவ வசதிகள் செய்யப் பட்டதை விடுதலைப்புலிகள் வெளிநாடுகளுக்கு காண்பிக்கவில்லை என்ற குற்றச்சாட்டு எழுந்துள் ளதே இது பற்றி உங்கள் கருத்து என்ன?**

அதை நான் முற்றாக மறுக்கிறேன் ஏனெனில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிதர்சனப் பிரிவினால் இங்கு நடக்கும் சம்பவங்கள் உடனுக்குடன் உலகிற்குத் தெரியும்வகையில் ஒளி,ஒலி பரப்புச் செய்யப்பட்டு வருகின்றது.

**♦ அவுஸ்திரேலியாவிலிருந்து உங்களுக்கு வந்துள்ள உதவிகள் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் , தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவோடும் இணைந்து இங்கு அனைத்துப் பகுதிகளிலும் நிதி சேகரிப்பு நடந்துள்ளது. எட்டு நாட்களாக நம்வானொலிஒலிபரப்பினூடாகவும் இந்த செயற்பாட்டில் ஈடுபட்டு பல லட்சக்கணக்கான நிதிகளை சேகரித்துள்ளோம். இதனை ஈழமக்களுக்கு பணமாகவே வழங்கியுள்ளார்கள். இந்த உதவிகள் உங்களை எப்படி வந்தடைந்துள்ளன அது பற்றிய தகவல்களைக் கூற முடியுமா?**

இன்று எமது பிரதேசத்தின் தேவைகளை நாமே பூர்த்தி செய்யக் கூடிய நிலை இருக்கின்றது. எனவே அவர்கள் இவ்உதவிகளை நிதியாக எமக்கு அனுப்பும் போது அந்த நிறுவனங்களுக் கூடாக நேரடியாகவே எமது தேவைகளைப் பூர்த்தி செய்யக்கூடியதாக உள்ளன.

**♦ இந்த வேளையில் அவுஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் மக்களுக்கு நீங்கள் என்ன கூற விரும்புகிறீர்கள்?**

இன்று எமது கிழக்கு மாகாணத்து மக்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் கடல் தொழிலையே செய்து வந்தவர்கள். அவர்கள் தமது தொழில், வீடுகள் என்பவற்றை இழந்துள்ளனர். அவர்களுக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்த வேண்டும். அதற்கு பணஉதவி மற்றும் ஏனைய உதவிகளையும் செய்ததற்கு நன்றி கூறி தொடர்ந்தும் மனிதாபிமான சேவைகளை செய்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன். ♦

# ஆழிப்பேரலையால் பாதிப்புற்ற மக்களுக்கு உளவள சிகிச்சை வழங்க நடவடிக்கை

(திருமலை)

திருகோணமலையில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு உளவள சிகிச்சையினை வழங்குவதற்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினர் நடவடிக்கை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் ஒரு கட்டமாக திருகோணமலை வலய கல்வி அலுவலகத்திற்கு உட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கும், அப்பிரதேச மக்களுக்கும் இச் சேவையினை ஆரம்பித்துள்ளனர். இந்த வலயத்தில் இதற்காக பயிற்றப்பட்ட 24 ஆசிரியர்களைக் கொண்டு அவர்களை எட்டு குழுக்களாகப் பிரித்து இச் சேவையினை வழங்கி வருகின்றனர். இதனைத் தொடர்ந்து சிங்கள ஆசிரியர்களைக் கொண்டு சிங்களப் பகுதிகளுக்கும் பின்னர் மூதூர், கந்தளாய் வலயத்தினருக்கும் இச் சேவையினை வழங்கவும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இது சம்பந்தமான ஆராய்வுக் கூட்டம நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு திருகோணமலை வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெற்றது.

# நலன்புரி நிலையங்களுக்கு வெளியே தங்கியுள்ள பாதிப்புற்றோருக்கும் உதவிவழங்கக் கோரல்

திருகோணமலை மாவட்டத்தில் கடற்புவி நடுக்க ஆழிப்பேரலையில் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களில் இல்லாது உறவினர்கள், நண்பர்கள் வீடுகளில் தங்கியிருப்போருக்கு இன்றுவரை நிவாரணங்கள் எதுவும் வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனியாரும், பொதுஅமைப்புக்களும் பல நிவாரணங்களை வழங்கியிருந்த போதும் அவை தமக்கு கிடைக்கவில்லை என அவர்கள் குறை கூறியுள்ளனர். குறிப்பாக மட்டிக்களி, லிங்கநகர், சீனன்குடா, வெள்ளைமணல், பெரியகடை, கொய்யாத்தோட்டம், பாலையூற்று போன்ற பகுதிகளில் அனர்த்தத்திற்கு உள்ளானவர்களுக்கே இந்த நிலை ஏற்பட்டுள்ளது. அரச அதிகாரிகள் இந்த விடயத்தில் கவனம் செலுத்தி இம் மக்களுக்கும் நிவாரணம் பெற்றுக் கொடுப்பதற்கு வழி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். அத்துடன் ஆழிப்பேரலை அனர்த்தம் காரணமாக தொழில் இழந்தோருக்கும் நிவாரணங்கள் வழங்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது இவ்கள் ஒரு வாரத்திற்கு மேலாக வருமானம் இன்றி தவிக்கின்றனர்.

# திருமலை மாவட்ட செயலகத்தில் தொடர்ந்து பிக்குகளால் உதவிப் பொருட்கள் கொள்ளை

திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கு வெளியிடங்களில் இருந்து வரும் நிவாரணப் பொருட்கள் பற்றிய விபரங்கள் எவ்வளவு வந்தது என்பதையும், அவை யார், யாருக்கு எவ்வளவு விநியோகிக்கப் பட்டது என்ற விபரங்கள் மாவட்ட செயலகத்தில் பார்வைக்கு வைக்கப்பட வேண்டும் என ஞாயிற்றுக் கிழமை நடைபெற்ற ஆழிப்பேரலை அனர்த்த மாவட்ட செயலணிக் கூட்டத்தில் கோரிக்கை விடுக் கப்பட்டுள்ளது.

அக்கோரிக்கைக்கு அரசாங்க அதிபர் சம்மதம் தெரிவித்துள்ளார். இதேவேளை திருகோணமலையில் தொடர்ந்தும் பௌத்த துறவிகள் சிலர் பாரவூர்திகள் மூலமாக நிவாரணப் பொருட்களை கச்சேரியில் இருந்து எடுத்துச் சென்று மக்களுக்கு விநியோகித்து வருகின்றனர். தாங்கள் இப்பொருட்களை சேகரித்து வந்து விநியோகிப்பது போன்ற மாயையை உருவாக்கும் செயற்திட்டத்திலும் அவர்களில் சிலர் ஈடுபட்டுள்ளனர்.சில பௌத்த துறவிகள் உண்மையிலேயே பொருட்களை வெளியிடங்களில் இருந்து சேகரித்து வந்து பாதிக்கப் பட்ட மக்களுக்கு வழங்கிவருகின்றனர் என்பதும் இங்கு குறிப்பிடத் தக்கது.

# லண்டனில் தமிழருக்கு நிதி சேகரிப்பில் ஐரோப்பிய யூனியன் பா.உ. தீவிரம்

இலங்கையில் இயற்கை அனர்த்தத்தால் ஏற்பட்டுள்ள இயற்கை அழிவிற்கு உதவி செய்யும் நோக்குடன் பிரித்தானியப் பிரதிநிதியாக ஜரோப்பிய பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் றொபேட் ஈவன்ஸ் லண்டனில் வீதி வழியாக நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளார். இலங்கையின் வடக்குக் கிழக்கு பகுதிகளில் அதிகம் யாழ்ப்பாணம் உட்பட வடமராட்சி, தென்மராட்சி ஆகிய பகுதிகளையும் பல தடவை சென்று பார்வையிட்டு தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் கடந்த காலத்தில் சென்று கலந்துரையாடி வந்த றொபேட் ஈவன்ஸ் தமிழ் மக்களைக் காக்கும் நிதி என்று உண்டியலுடன் வீதியால் நிதிசேகரித்து வருகின்றமை மிகவும் முக்கியத்துவமான விடயமாகக் கருதப்படுகிறது. இந்த நிதி சேகரிப்பில் பிரித்தானிய அரசியலுடன் அதிகம் தொடர்புகளைப் பேணிவரும் கணக்காளர் சுரேஸ், கவுன்சிலர் தயா ஆகியோரும் ஜரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினருடன் நிதி சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.தமிழீழ தேசத்தைப் பல தடவைகள் சென்று பார்வையிட்ட முதலாவது ஜரோப்பியப் பாராளுமன்ற உறுப்பினர் றொபேட் ஈவன்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிதிசேகரிப்பில் சுமார் 200 பிரித்தானியர்களும். ஈழத் தமிழர்களும் ஈடுபட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்த நிதிசேகரிப்பில் தொழிற்கட்சி பாராளுமன்ற உறுப்பினராக இருந்து அமைச்சராகவுள்ள கெரத்தோமஸ் ஆகியோரும் கலந்து கொண்டிருந்தார். இவரும் இலங்கை இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயங்களை நேரில் வந்து பார்வையிட்டுச் சென்றது குறிப்பிடத்தக்கது.



யுனிசெவ் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கரோல்பெலமி நேற்று முன்தினம் முள்ளியவளை இடம் பெயர்ந்தோர் நலன் புரிநிலையத்தில் மக்களைப் பார்வையிடுவதைப்படத்தில் காணலாம்.

## விபத்தில் ஈருருளி சேதம்!

ஈருருளியுடன் உந்துருளி மோதி விபத்துக்குள்ளானது.

இச்சம்பவம் நேற்று முன்தினம் காலை 10.30 மணியளவில் இடம் பெற்றது. விசுவமடுவிலிருந்து பரந்தன் நோக்கி ஈருருளியில் சென்ற பெண்மணியுடன் அதே திசையால் வந்த உந்துருளி மோதியதில் ஈருருளி பலத்த சேதத்திற்குள்ளானது. எனினும் ஈருருளியில் பயணித்த பெண் பாதிப்பின்றி உயிர் பிழைத்தார். (05)

- வடமராட்சி கரையோர மக்களை -

# கிராமங்களை அண்டிய பகுதியில் மீளக்குடியேற்றும் பணி ஆரம்பம்

வடமராட்சியின் கரையோரக் கிராமங்களிலிருந்து இடம் பெயர்ந்துள்ள மக்களை மீண்டும் கரையோரக் கிராமங்களை அண்டிய பகுதிகளில் முகாம் அமைத்து குடியேற்றும் பணி நேற்று முன்தினம் இரவு முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வடக்கின் கற்கோவளம் முதல் தொண்டமனாறு வரையான கரையோரப்பகுதிகளை அண்மித்துள்ள கிராமங்களிலேயே இடம்பெயர்ந்த மக்கள் குடியேற்றப்பட்டு வருகின்றனர். தெரிவுசெய்யப்பட்ட 13 பாடசாலைகள் மற்றும் இந்து, கிறிஸ்தவ தேவாலயங்களுக்குத் தற்போதுள்ள முகாம்களில் இருந்து வாகனங்கள் மூலம் இவர்கள் ஏற்றிச்செல்லப்பட்டு குடியேற்றப்படுகின்றனர்.

ஆயினும் படையினரின் கட்டுப்பாட்டின் கீழுள்ள வடமராட்சி கிழக்கின் மணற்காடு மற்றும் பொற்பதிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து தென்மராட்சி வறணி மற்றும் சாவகச்சேரிப்பகுதியிலுள்ள பாடசாலைகளில் குடியமர்ந்துள்ள மக்கள் தொடர்ந்தும் அங்கேயே தங்கவைக்கப்படவுள்ளனர்.

எனினும் இப்பகுதிகளில் துப்பரவு பணிகளை முழுவீச்சில் தமிழீழ விடுதலைப்புலிகளுடன் இணைந்து யாழ்.பல்கலைக்கழக மாணவர்களும், தொண்டமைப்பு பிரதிநிதிகளும் மேற்கொண்டுள்ளனர். துப்புரவு பணிகள் முடிவுற்ற பின்னரே வடமராட்சி கிழக்கினை அண்டியுள்ள பகுதிகளிற்கு இடம்பெயர்ந்துள்ள மக்கள் மாற்றப்படவுள்ளனர்.

'சுனாமி' கடற்கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்ட யாழ்.குடாநாட்டு மக்களிற்கான உதவி நடவடிக்கைகளையும், மீள் குடியமர்வு ஏற்பாடுகளையும் ஒரு சீராக மேற்கொள்ள ஏதுவாக வடமராட்சியின் மையப் பகுதிகளான கரவெட்டி, உடுப்பிட்டி, புலோலி, மந்திகைப்பகுதிப்பாடசாலைகளில் முகாமிட்டுள்ள மக்களைக் கரையோரப் பகுதி பகுதிகளில் முகாம்களை அமைத்துக் குடியேற்றுவதென நேற்று முன்தினம் இடம்பெற்ற இணைப்புக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டிருந்தது தெரிந்ததே. (27)

# அம்பாறை நிவாரணப் பணிகள் குறித்து

## —அரசின் செயற்பாடுகள் மந்தகதி—

—மு.கா. தலைவர் ரவூப் ஹக்கீம் குற்றச்சாட்டு—

சுனாமி தாக்கத்தால் அதிக இழப்புக்களைச் சந்தித்த அம்பாறை மாவட்டத்தில் நிவாரணப்பணிகளை மேற்கொள்வதில் அரசாங்க இயந்திரத்தின் செயற்பாடு மந்த கதியில் இருப்பதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தற்போது அம்பாறையில் தனது கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 பேருடன் முகாமிட்டுத்தங்கியுள்ள இவர் பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் சென்று பார்வையிட்டார். அம்பாறை மாவட்ட நிலைமை தொடர்பாக செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது; இம் மாவட்டத்தின் அனர்த்த முகாமைத்துவம் மந்த கதியில் உள்ளது. இது கவலைக்குரிய விடயம்.மீட்புப் பணிகளில் எமது கட்சியைச் சேர்ந்த 1,000 தொண்டர்கள் நேற்று முதல் ஈடுபட்டுள்ளனர். காரைதீவு, பாண்டிருப்பு, நீலாவணை போன்ற தமிழ்ப் பிரதேசங்கள் உட்பட சகல பிரதேசங்களிலும் இந்த மீட்புப் பணி தொடரும் என்றார் அவர்.

## சான்றிதழ் வழங்கல்

(கிளிநொச்சி)

ரெக் கணனி பயிற்சி நிலையத்தால் வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் கணினிப் பயிற்சியினை தொடர்ந்த கற்கையாளர்களிற்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு நடைபெறவுள்ளது.

வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் கணனி கற்றை (MS office) யினை மேற்கொண்ட 50 இற்கும் மேற்பட்ட கற்கையாளர்களிற்கு 10.01.2005 பிற்பகல் 3 மணிக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் சிறப்பாக நடைபெறவுள்ளது. (15)

# கமக்கார அமைப்புக்களுக்கான வாய்க்கால் பிரதிநிதிகள் தெரிவு

(வட்டக்கச்சி)

வட்டக்கச்சி பிரதேசத்தின் 2005 ஆம் ஆண்டுக்கான கமக்கார அமைப்புக்கான புதிய வாய்க்கால் பிரதிநிதிகள் தெரிவு அண்மையில் இடம் பெற்றது.

வட்டக்கச்சியின் பிரதான வாய்க்கால்கள் D1, D2, D3, D4, ஆகிய வாய்க்கால்களுக்கான கமக்கார அமைப்புத் தெரிவு நான்கு தனித்தனி குழுவாக பதிவீடு செய்யப்பட்டுள்ளது. D3 கமக்காரர் அமைப்புத் தலைவர்-ச.பாஸ்கரன், செயலாளர் இ.இளங்குமரன், பொருளாளர் ப.ஜெயகாந்தன், D1 கமக்கார அமைப்புத்தலைவர் ஆ.சிறீரங்கநாதன், செயலாளர் பெ.இராமச்சந்திரன், பொருளாளர் சி.சிவச்சந்திரன் ஆகியோர் அடங்கலாக 06 பேர் கொண்ட நிர்வாக உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர். D2, D4 ஆகிய இரு கமக்கார அமைப்புக்களும் பல முரண்பாடுகளுடன் அமைப்புத் தெரிவு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்விற்கு-திட்டமுகாமையாளர் பொன் நித்தியானந்தம், தமிழீழ பொ.மேம்பாட்டு நிறுவன உத்தியோகத்தர், கிளி.கிழக்கு பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர், கிராமசேவையாளர் மற்றும் பல தரப்பட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. (12)

# பாதிப்புற்றுள்ள தமிழ் மக்களின் துயரங்களில் நாமும் பங்கேற்பதில் நிம்மதியடைகின்றோம்

## மலையக தமிழ் மக்கள் பிரதிநிதி கருத்து!

(அலுவலக செய்தியாளர்)

மலையக தமிழ் மக்களால் நேற்று முன்தினம் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்கள் வன்னிக்கு எடுத்து வரப்பட்டது. இது தொடர்பாக தோட்டத் தொழிலாளர்களின் பிரதி நிதியாக வருகைதந்த சி.தங்கராஜாவிடம் நாம் தொடர்பு கொண்டபோது, மலையக தமிழ் மக்களாகிய நாம் இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்குகிழக்கு மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆதங்கத்துடனும் அவர்களின் துன்ப துயரங்களில் நாமும் பங்கு கொள்ள வேண்டும் என்ற நோக்கோடும் தான் இந்த உதவிப் பொருட்களைக் கொண்டு வந்துள்ளோம் என்றார்.

இந்த மக்களுக்கு அரசாங்கம் இது வரையில் எந்த உதவியினையும் செய்யவில்லை என்பதனையும் வேறு வழிகளில் வரும் உதவியினை சில மோசடிக்காரர்கள் தடுப்பதாகவும் வழிப்பறி செய்வதாகவும் குறிப்பாக இராணுவக் கட்டுப்பாட்டிலுள்ள வடக்கு கிழக்குப் பகுதிகளிலேயே இவ்வாறான நடவடிக்கைகள் நடைபெறுவதாகவும் நாம் அறியக் கூடியதாகவுள்ளது. அரசு இதுவிடயத்தில் வேண்டுமென்றே பாராமுகமாகவுள்ளது. இது தமிழ் மக்களை எவ்வகையிலாவது பல வீனப்படுத்தி அழித்தொழிக்கும் நோக்காகவே நான் கருதுகின்றேன்.

இயற்கை அனர்த்தத்தினால் உறவுகளை பறிகொடுத்து, உடமைகளைப் பறிகொடுத்து மீள முடியாத துயரத்திற்கு ஆளாகியிருக்கும் எம் தமிழ் உறவுகளுக்கு மலையக மக்கள் சார்பாக எனது உணர்வுபூர்வமான ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றேன். நாம் இந்த மக்களுக்காக பூண்டுலோயா பிரதேச சீனித் தோட்டப்பிரிவு, சீன் தோட்ட மேல் பிரிவு, சீன் பழைய தோட்ட மேல் பிரிவு, சீன் பழைய தோட்ட கீழ் பிரிவு ஆகிய நான்கு தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அனைவரும் தமது குறைந்த ஊதியத்தில் ஒரு நாள் ஊதியத்தை ஒதுக்கி சுமார் நான்கரை இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து, பால்மா, உலர்உணவு மற்றும் உடு புடவை என்பவற்றைக் கொண்டு வந்துள்ளோம். இவற்றைச் சேகரித்துக் கொண்டு வருவதற்கு மிகவும் சிரமப்பட்ட போதிலும் இதனால் நாம் பெருமையடைகின்றோம என்றார். (சு,ச)

# றொரன்றோ வரசித்தி விநாயகர் ஆலயம் அனர்த்த உதவியாக 26,568 டொலர்கள் வழங்கல்

தமிழர் தாயகத்திலும் மற்றும் பிற பகுதிகளிலும் கடந்த டிசம்பர் 26ஆம் திகதி இடம்பெற்ற சுனாமி அனர்த்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புக்களை சீர்படுத்தி, எம் தமிழீழ உறவுகளிற்கு வலுச்சேர்க்கும் முயற்சிகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வயது வேறுபாடின்றி முழுமூச்சுடன் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வகையில் சமூக அக்கறையுடன் ஈடுபட்டுவரும், கனடாவில் அமைந்திருக்கும் றொரன்றோ ஸ்ரீ வரசித்தி விநாயகர் தேவஸ்தானம் 26 ஆயிரத்து 568 டொலர்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடாக தாயத்திற்கு அனுப்பிவைத்துள்ளது. இந்நிதியினை ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ.பஞ்சாட்சர விஜயகுமாரக் குருக்கள் அவர்கள், தமிழர் புனர்வாழ்வுக் கழகப் பிரதிநிதி சபா வரதராசா அவர்களிடம் 01-01-2005 இரவு கையளித்தார். இந்நிதியானது, கடந்த டிசம்பர் 31ஆம் திகதியும் மற்றும் ஜனவரி 01ம் திகதியும் ஆலயத்தில் உண்டியல் மூலமாகவும் மற்றும் அர்ச்சனை சீட்டுக்களினூடாகவும் பெறப்பட்ட நிதியாகும். காலத்தின் தேவை உணர்ந்து, உறவுகளின் இடர் நிலையைப் புரிந்து கொண்டு நன்கொடையளித்த அனைத்து அடியார்களுக்கும் ஆலய நிர்வாகத்தினர் தமது நன்றியைத் தெரிவித்துள்ளனர்.

## இடமாற்றம்

(அலுவலசெய்தியாளர்)

அண்மையில் ஏற்பட்ட கடற்பூகம்ப அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவு நகரில் இயங்கி வந்த சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கியின் முல்லைத்தீவு நகரக் கிளை தற்காலிகமாக தண்ணீரூற்று நெடுங்கேணிச் சந்திக்கருகாமையில் இடம்மாற்றப்பட்டு தற்போது இயங்கி வருகின்றதென சமூக பொருளாதார அபிவிருத்தி வங்கி முல்லைத்தீவு நகரக் கிளை முகாமையாளர் தெரிவித் துள்ளார். (சோ)

# உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை வீழ்ச்சி

# விலைகளைக் குறைக்க சிறிலங்கா அரசு மறுப்பு!

(கொழும்பு)

**உலக சந்தையில் மசகு எண்ணெய் விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ள போதிலும் அதற்கேற்ப விலைக் குறைப்பை மேற்கொள்ள சிறிலங்கா அரசு மறுப்புத் தெரிவித்துள்ளது.**

உலக சந்தையில் 55 அமெரிக்க டொலர்களுக்கு ஒரு பரல் மசகு எண்ணெய் உயர்வாக விற்பனை செய்யப்பட்ட நிலையில் சிறிலங்காஅரசு அதற்கேற்ற வகையில் எரிபொருட்களின் விலையை அதிகரித்திருந்தது.

எனினும் தற்போது உலக சந்தையில் ஒருபரல் மசகு எண்ணெய் 40 அமெரிக்க டொலர்களா க குறைவடைந்துள்ள நிலையில் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது என சிறிலங்கா அரசு அறிவித்துள்ளது.

ஒரு பரல் மசகு எண்ணெய் யின் விலை 35 டொலர்களாக குறைவடையும் பட்சத்திலேயே எரிபொருட்களின் விலைகளில் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என சிறிலங்காவின் மின்சக்தி எரிபொருள் துறை அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அவர் இது பற்றித் தெரிவித்துள்ளதாவது; உலக சந்தையில் எண்ணெய் விலை 35 டொலர்களாக குறையும் வரைக்கும் எமது நாட்டில் எண்ணெய் விலையைக் குறைக்க மாட்டோம். தற்பொழுது எண்ணெய் விலை 40 டொலர்களாக உலக சந்தையில் குறைந்துள்ளது. அரசு பெற்றோல் லீற்றர் 4 ரூபாவாகவும், டீசல் லீற்றர் 6 ரூபாவாகவும், மண்ணெண்ணெய் லீற்றர் 14 ரூபாவாகவும் குறைந்த விலையில் விநியோகம் செய்வதால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டு வருகிறது என்று கூறினார்

## 19 பாடசாலைகள் சேதம்

கடற்கொந்தளிப்பு காரணமாக அக்கரைப்பற்றில் 19 பாடசாலைகள் சேதமடைந்துள்ளதாகவும் அவற்றில் 5 பாடசாலைகள் முற்றாக சேதமடைந்துள்ளதாகவும் வலயக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இதுவரை கிடைத்த தகவலின் படி ஒரு ஆசிரியரும், 4 மாணவர்களும் இறந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

## பிரதமரிடமிருந்த பொறுப்புக்கள் அனைத்தும் சனாதிபதியால் பறிப்பு

### -சனாதிபதி செயலகம் தகவல்-

(கொழும்பு)

கடல் அலைகள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் பொறுப்புக்கள் யாவும் பிரதமர் மஹிந்தராஜபக்ஷ தலைமையின் கீழ் செயற்பட்டு வந்தன. ஆனால் தற்பொழுது சனாதிபதி அவர்கள் முழுப்பொறுப்புக்களையும் ஏற்றுள்ளாரென சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

கடல் அனர்த்தம் ஏற்பட்ட பொழுது சனாதிபதி வெளிநாட்டில் பிரயாணம் மேற்கொண்டிருந்தபடியால் பிரதமர் அப்பொறுப்புக்களை தம்வசம் வைத்திருந்தார். அவர் நாடு திரும்பிய பின் முழுப்பொறுப்புக்களையும் தமது கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துள்ளதாக சனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

நிவாரண விநியோக நடவடிக்கைகளில் சிறிலங்கா சனாதிபதிக்கும் பிரதமருக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டிருப்பதாக ஏற்கனவே செய்திகள் வெளியாகியிருந்தமை தெரிந்ததே.

## அனர்த்தப் பகுதிகளின் கட்டட நிர்மாணத்திற்கு ஐரோப்பிய யூனியன் ஒரு பில்லியன் யூரோ உதவி

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் சேதமடைந்த வீடுகள் மற்றும் கட்டடங்களை மீள அமைப்பதற்கென ஐரோப்பிய ஒன்றியம் ஒரு பில்லியன் யூரோவை நிதியுதவியாக வழங்கத்தீர்மானித்துள்ளது.

அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கு 250 மில்லியன் யூரோவை வழங்கவும் எண்ணியுள்ளதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் அபிவிருத்திக்கும் மனிதநேய உதவிக்குமான ஆணையாளர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

## பாதிக்கப்படாதோருக்கு நிவாரணம் அவற்றைப் பெற்றபின் விற்பனை

(கொழும்பு)

சுனாமி அலைத் தாக்கத்துக்குள்ளான தங்காலை அகதிகளுக்கு வழங்கப்படும் நிவாரணப் பொருட்களை பாதிக்கப்படாதோரும் கடை வியாபாரிகளும் முண்டியடித்துப்பெற்றுக் கொண்டு அதனை மீண்டும் பாதிக்கப்பட்டவர்களுக்கு விற்பனை செய்யும் செயல் நடைபெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

தங்காலையிலுள்ள வனவாசிக் குடா புத்த விகாரையில் வழங்கப்பட்ட அரிசி பருப்பு போன்ற நிவாரணப் பொருட்களே இவ்வாறு விற்கப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது. சிலர் குடும்ப உறுப்பினர்களையும் வீட்டையும் இழந்த நிலையில் முகாம்களுக்கு செல்லாது தமது சொந்த இடங்களிலேயே காலம் கழிப்பதாகவும் அவர்கள் இந்த நிவாரணப் பொருட்களை பெறுவதில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சுனாமியால் ரெலிகொம்மிற்கு ரூ 750 மில்லியன் இழப்பு

'சுனாமி' அனர்த்தத்தில் சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு 750 மில்லியன் ரூபா இழப்பு ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகின்றது.

சுனாமி அலைகளால் அழிவுகளை சந்தித்துள்ள போதிலும் தமது மூன்றாண்டு அபிவிருத்தித் திட்டம் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் என சிறிலங்கா ரெலிகொம் நிறுவனத்தின் தலைவர் அனலி ஒபய சேகர தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பகுதிகளுடன் மின்காந்த அலைகள் மூலம் தொடர்புகளை ஏற்படுத்தும் முயற்சிகளை சிறிலங்கா ரெலிகொம் முன்னெடுத்துவருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இதுவரை 18000 தொலைபேசி இணைப்புக்கள் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இவற்றை மீளமைக்க பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## தங்க ஆபரணங்கள் மீட்பு

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட 72 இலட்சம் ரூபா பெறுமதியான தங்க ஆபரணங்களை விமான நிலைய சுங்கப்பிரிவு அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். இச்சம்பவம் தொடர்பாக ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## எதிர்க்கட்சித் தலைவர் ரணில் காலிக்கு நேற்று முன்தினம் விஜயம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் காலிக்கு விஜயம் செய்து கடல் கோளினால் பாதிக்கப்பட்ட மக்களைப் பார்வையிட்டதுடன் அழிந்துபோன பகுதிகளையும் பார்வையிட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அது குறித்து கருத்து வெளியிட்ட அவர், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்கள் வழங்குதல் மற்றும் வீடுகளை அமைத்தல் என்பவற்றிற்கப்பால் அவர்களின் வருமானத்திற்கான உருப்படியான திட்டங்கள் தீட்டப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (32)

## பண்டாரகம பிரதேச கட்டடங்கள் சிலவற்றில் திடீர் வெடிப்பு

### அச்சமடையத் தேவையில்லை என அறிவிப்பு

கொழும்பின் புறநகரான களுத்துறை பண்டாரகம மில்லேனியம் பிரதேச செயலகத்தின் கட்டடத்தில் திடீர் வெடிப்பு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான வெடிப்புகள் அப் பிரதேசத்தின் சில வீடுகளிலும் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. எனினும் புவியதிர்வுகள் எவையும் உணரப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக புவியியல் ஆய்வு மற்றும் அகழ்வாராய்ச்சி மையத்துடன் தொடர்பு கொண்ட போது, இதுவரையில் இலங்கைத் தீவகத்தைப் பாதிக்கும் வகையில் புவியதிர்வு எவையும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அனர்த்தப் பகுதிகளில் கொள்ளையிடுவோரைக் கண்டதும் சுட உத்தரவு

(கொழும்பு)

கடற்கொந்தளிப்பால் பாதிப்புற்றுள்ள பகுதிகளில் சொத்துக்களை கொள்ளை அடிப்பவர்களைக் கண்டால் கண்ட இடத்தில் சுடுமாறு சிறிலங்கா பொலிஸ்மா அதிபர் சந்திரா பர்னாந்து சகல பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கும் அறிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட பிரதேசங்களை பாதுகாப்பதற்கு கொழும்பில் இருந்து விசேட பொலிஸ் பிரிவுகள் அனுப்பப்பட்டுள்ளதுடன் இவர்களுக்கு துணையாக இராணு வத்தினரும் கடமையில் ஈடுபட்டுள்ளனர். பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வீடுகள், கடைகள் மற்றும் வாகனங்கள் கொள்ளை அடிக்கப்பட்டு வருகிறதென்று பொலிஸ் தலைமை அலுவலகத்திற்கு தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றபடியால் பொலிஸ்மா அதிபர் இக்கட்டளையைப் பிறப்பித்துள்ளார் என 'திவயின' தெரிவித்துள்ளது.


பண்டிகைக் கால பரிசு மழை!

அதிர்ஷ்ட சீட்டிழுப்பு

முதலாம் பரிசு - 50 கிராம் கோல்ட் பார்
மற்றும் 20கிராம், 10கிராம், 4 கிராம் பரிசுகள் 70 அதிர்ஷ்டசாலிகளுக்கு

வெளிநாடுகளில் இருக்கும் உங்கள் அன்புக்குரியவர்களிடம் இருந்து வெஸ்டர்ன் யூனியன் பணப்பரிமாற்றத்தின் மூலம் பணத்தை இலங்கையின் அங்கீகாரம் பெற்ற MMBL உப முகவர்கள் ஊடாகப் பெற்று பரிசுகளை வெல்லுங்கள்!

விபரங்களுக்கு MMBL முகவரைத் தொடர்பு கொள்ளுங்கள் 011-2372333

500 grams GOLD

ரூபாய் 250,000 இற்கு மேல் காசு பெறும் வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியான பரிசுகள்

AUTHORISED AGENT

WESTERN UNION
பணப்பரிமாற்றம்
நிபந்தனைகள் பிரயோகிக்கப்படும்
இச்சலுகை டிசம்பர் 2004, ஜனவரி 2005 மாதங்களில் பணப்பரிமாற்றம் செய்பவர்களுக்கு மட்டும்!

MMBL
Money Transfer(PVT) LTD
300,Galle Road, Colombo-03
(வெளிநாட்டு நாணயம் மாற்று முகவர்)
அநேகமான இடங்கள் 365 நாட்களும் திறந்திருக்கும்

(சி-11121)

FLEX Graphic

# பேச்சில் சிறிய முன்னேற்றம்

# பாக். அமைச்சர் கசூரி கருத்து

(இஸ்லாம பாத்)

**இந்தியா - பாகிஸ்தான் பேச்சுவார்த்தையில் சிறு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்று பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமது கசூரி கூறினார்.**

பஞ்சாப் மாநில எல்லை அருகே கசூர் என்றஇடத்தில் பாகிஸ்தான் 2ஆவது எல்லைச் சோதனைச் சாவடியை நேற்று முன்தினம் திறந்தது. பாக். வெளியுறவு அமைச்சர் குர்ஷித் முகமதுகசூரி இதை திறந்து வைத்தார். பின்னர் அவர் அளித்த பேட்டியில்;

இந்தியா - பாக்., பேச்சு மெதுவாக நடந்தாலும் அதில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. காஷ்மீர் பிரச்சினைக்கு நீண்ட கால நிரந்தரத் தீர்வு காண பாக். விரும்புகிறது. இந்தியா - பாக். மற்றும் காஷ்மீர் மக்களுக்கு இந்தத் தீர்வு ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

கசூர் எல்லைச் சாவடியை இந்தியாவுக்கு செல்ல பயன்படுத்த வேண்டும் . இதன் மூலம் வர்த்தக மேம்பாடு ஏற்படும் ஐ.நா. தீர்மானத்தில் இருந்து பாக். பின் வாங்கவில்லை. அதன் முக்கியத்துவத்தைக் குறைக்கவில்லை. பாக். மற்றும் காஷ்மீர் மக்களின் ஒப்புதல் இன்றி இந்தியாவுடன் பாக். பேச்சு நடத்துவதாக கூறப்படும் குற்றச்சாட்டு தவறு என்று கூறினார்.

## மத்திய பிரதேச போக்குவரத்துக்கழகம் விரைவில் மூடப்படும்- முதல்வர் அறிவிப்பு

"மத்திய பிரதேச போக்குவரத்துக் கழகம் விரைவில் இழுத்து மூடப்படும்" என அம் மாநில முதல்வர் பாபுலால் கவுர் அறிவித்துள்ளார். இது குறித்து பாபுலால் கவுர் நிருபர்களிடம் கூறியதாவது: மாநில அரசின் போக்குவரத்துக் கழகத்திலுள்ள ஆயிரம் பேருந்துகளும் ஆபத்தான நிலையிலேயே இயங்கி வருகின்றன. இதனால் மாநில அரசுக்கு கடும் பொருளாதார இழப்பு ஏற்பட்டுள்ளது.

போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் 11ஆயிரத்திற்கு மேற்பட்ட ஊழியர்களுக்கும் "தானாக முன்வந்து ஓய்வு பெறும் திட்டம்" அறிமுகப்படுத்தப்படும். இதன் பின் மாநில போக்குவரத்துக்கழகம் இழுத்து மூடப்படும் போக்குவரத்துக் கழகத்துக்குப் பதிலாக கம்பனி ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் புதிய பேருந்துகள் வாங்கப்படும் மேலும் அக்கம்பனியில் புதிய ஒழுங்கு முறைகளும் அமுற்படுத்தப்படும். இவ்வாறு பாபுலால் கவுர் கூறினார்.

# தேசிய கீதத்தில் மாற்றம் செய்யக் கோரி

# இந்திய உயர் நீதிமன்றில் வழக்கு

(புதுடில்லி)

தேசிய கீதத்தில் மாற்றம் செய்யக்கோரி உச்சநீதிமன்றில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இந்தியாவின் தேசிய கீதமான "ஜன கன மன...." என்று தொடங்கும் பாடல் பிரபல வங்காள கவிஞர் ரவீந்திரநாத்தால் எழுதப்பட்டது ஆகும். இந்தப் பாடல் குறித்து பிரச்சினை எழுப்பி உச்சநீதிமன்றில் சஞ்சீவ் பட்நாகர் என்பவர் வழக்குத் தொடர்ந்து இருக்கிறார். வழக்கில் அவர் கோரி இருப்பதாவது;. இந்திய தேசிய கீதத்தில் வரும் 'சிந்து' என்ற வார்த்தை சிந்து மாநிலத்தைக் குறிக்கிறது. இந்த மாநிலம் தற்போது பாகிஸ்தானில் உள்ளது. எனவே தேசிய கீதத்தில் 'சிந்து' என்ற வார்த்தையை நீக்க உத்தரவிட வேண்டும் 'சிந்து' என்ற வார்த்தைக்கு பதிலாக 'காஷ்மீர்' என்று அந்த இடத்தில் சேர்க்க வேண்டும்.அல்லது வேறு வார்த்தையை சேர்க்கலாம். இவ்வாறு வழக்கில் கூறப்பட்டுள்ளது.

இந்த வழக்கை தலைமை நீதிபதி ஆர்.சி.லகோத்தி, நீதிபதி ஜி.பி.மாத்தூர் ஆகியோர் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டனர். இந்த வழக்கில் மத்திய அரசு சார்பில் பதில்மனு தாக்கல் செய்யப்பட்டது. அதில் கூறப்பட்டிருப்பதாவது இந்தியாவில் இருந்து பாகிஸ்தான் பிரிக்கப்படாமல் இருந்த போது 'சிந்து' என்ற மாநிலம் இந்தியாவுடன் இருந்தது. பின்பு இந்த மாநிலப்பகுதி பாகிஸ்தானுடன் சேர்ந்தது. 1950 ஆம் ஆண்டு சனவரி 24ஆம் திகதி அப்போதைய சனாதிபதி ராஜேந்திரபிரசாத் தற்போதைய தேசிய கீதத்துக்கு ஒப்புதல் அளித்துள்ளார். 'சிந்து' என்பது மாநிலத்தை மட்டும் அல்ல 'சிந்து' நதி கலாசாரத்தையும் குறிக்கிறது. 'சிந்து'வில் இருந்துதான் 'இந்தியா' எனற வார்த்தை உருவானது. சிந்து என்பது சிந்து இன மக்களையும் குறிக்கிறது எனவே இந்த வார்த்தையை நீக்க வேண்டியது இல்லை. இதுபோன்ற பிரச்சினையில், மனுதாரருக்கு ஆதரவாக தீர்ப்பளித்தால், மேலும் பலர் பல்வேறு கோரிக்கைகளுடன் நீதிமன்றுக்கு வர வாய்ப்பு உண்டு ஒவ்வொரு பகுதியினரும் ஒரு கோரிக்கையுடன் நீதிமன்றுக்கு வரலாம். எனவே இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும். இவ்வாறு அரசு மனுவில் கூறப்பட்டு இருந்தது. வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் மத்திய அரசுக்கும், மத்திய உள்துறை மந்திரிக்கும் , வெளி உறவுத்துறை மந்திரிக்கும், மனிதவள மேம்பாட்டுத்துறை மந்திரிக்கும் கட்டளை அனுப்ப உத்தரவிட்டனர்.

# முதல்வர் மாயாவதிக்கு உச்ச நீதிமன்று கட்டளை

(புதுடில்லி)

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கன்சிராமை சந்திக்க விடாமல் தடுப்பதாகக்கூறிஅவரது தாய் தாக்கல் செய்த மனு தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு மாயாவதிக்கு உச்ச நீதிமன்றம் கட்டளை அனுப்பியுள்ளது.

பகுஜன் சமாஜ் கட்சித் தலைவர் கன்சிராம் உ.பி. முன்னாள் முதல்வர் மாயாவதியின் வீட்டில் தங்க வைக்கப்பட்டுள்ளார். கன்சிராமை பார்க்க விடாமல் தடுப்பதாகக் கூறி அவரின் தாய் மற்றும் சகோதரர் இருவரும் மாயாவதிக்கு எதிராக உச்ச நீதிமன்றில் மனுத்தாக்கல் செய்தனர். கன்சிராமுக்கு தகுந்த சிகிச்சை அளிக்க வேண்டும் அவரைச் சென்று பார்க்கும் உரிமை தங்களுக்கு வழங்கப்பட வேண்டும்'. என்று அந்த மனுவில் தெரிவிக்கப்பட்டது.

நீதிபதிகள் சந்தோஷ் ஹெக்டே, எஸ்.பி.சின்கா ஆகியோர் அடங்கிய பெஞ்ச் நேற்று முன்தினம் இந்த மனுவை விசாரித்தது. இது தொடர்பாக இரண்டு வாரங்களுக்குள் பதிலளிக்குமாறு மாயாவதிக்கும் மத்திய அரசு மற்றும் சிலருக்கும் கட்டளை அனுப்ப நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# விமானத்தில் பணம் கடத்தல்

# 6இந்தியர்களுக்கு சிறை

(டுபாய்)

டுபாயில் இருந்து பஹ்ரைனுக்கு சரக்கு விமானத்தில் ரூ.12 கோடி பணத்தை அனுப்ப முயற்சி நடந்தது கண்டுபிடிக்கப்பட்டது. டுபாயில் இயங்கும் இந்தியருக்குச் சொந்தமான நிறுவனம் இந்தப் பணத்தை அனுமதி பெறாமல் அனுப்பியதாகக் கூறப்படுகின்றது.

இதையொட்டி டுபாய் விமான நிலையத்தில் ஒரு விமான நிறுவனத்தின் பாதுகாப்புப் பிரிவுத் துணை இயக்குனராகப் பணியாற்றிய பெண் அதிகாரி மற்றும் மேலாளர், 2 ஊழியர்கள் உட்பட 6 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவர்கள் அனைவருமே இந்தியர்கள். இந்த 6 பேரில் 3 பேர் பெண்கள்.

வழக்கை விசாரித்த நீதிபதி குற்றம் சாட்டப்பட்ட பெண் அதிகாரி உட்பட 4 பேருக்கு தலா 3ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்தார். மற்றும் இரண்டு பெண்களுக்கு இரண்டு மாதம் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.சிறைத்தண்டனை முடிந்த பிறகு 6பேரையும் நாடு கடத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

# இந்திய கம்யூ.கட்சி ரூ.5இலட்சம் வழங்கியது

(புதுடில்லி)

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்விற்கு உதவும் வகையில் பிரதமரின் பொது நிவாரண நிதிக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ரூ.ஐந்து இலட்சம் நிதி வழங்கியது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களின் மறுவாழ்வுக்கு உதவும் வகையில் பலரும் நிதி உதவி அளித்து வருகின்றனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நேற்று முன்தினம் பிரதமரின் பொது நிவாரண நிதிக்கு ரூ.ஐந்து இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் ஏ.ஐ.டி.யு.சி.மற்றும் அனைத்து இந்திய வங்கி ஊழியர்கள் சங்கங்களின் சார்பாகவும் முதல் கட்ட தவணையாக ரூ.43.65 இலட்சம் நிதி வழங்கப்பட்டது.

இத்தொகையினை இந்திய கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களான ஏ.பி.பரதன், குருதாஸ் தாஸ் குப்தா மற்றும் டி.ராஜா ஆகியோர் தலைமையிலான குழு பிரதமரை நேரில் சந்தித்து அளித்தது.

# பாராளுமன்றம் நடைபெற நிமிடத்துக்கு ரூ.18 ஆயிரம் செலவு

(திருவனந்தபுரம்)

பாராளுமன்றம் நடைபெறுவதற்கு ஒரு நிமிடத்திற்கு 18 ஆயிரத்து 430 ரூபாய் செலவாகிறது" என்று நிர்வாகம் மற்றும் வளர்ச்சி பற்றிய அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"சபை நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படுத்துவதன் மூலம் ஆண்டுக்கு 60 மணி நேரத்தை பாராளுமன்ற உறுப்பினர்கள் வீணாக்குகின்றார்கள்" என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

# பிலிப்பைன்ஸ் உதவியை ஏற்க மறுத்த அப்துல் கலாம்

பிலிப்பைன்ஸ் நாட்டு பெண் சனாதிபதி குளோரியா மகபாகல் அரோயா சனாதிபதி அப்துல் கலாமுடன் தொடர்பு கொண்டு சுனாமி பேரழிவுக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்ததுடன் இந்தியாவுக்கு நிவாரண உதவி வழங்கவும் முன் வந்தார். அவருடைய உதவியைப் பெற்றுக்கொள்ள மறுத்த கலாம், மத்திய-மாநில அரசுகள் முழு அளவில் நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருவதாக அவரிடம் தெரிவித்தார். பிரதமர் மன்மோகன்சிங்கும் வெளிநாட்டு உதவிகள் இப்போதைக்குத் தேவை இல்லை என்று அறிவித்து இருப்பது குறிப்பிடத்தக்கது.



சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட பகுதிகளை விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தலைமையிலான குழுவினர் பார்வையிடுகின்றனர்.



சுனாமி பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணப் பணி குறித்து விடுதலைப்புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தலைமையிலான குழுவினரும், சிறிலங்காவின் விசேட அதிரடிப்படை குழுவினரும் கலந்துரையாடுகின்றனர்.

## கேப்டவுன் டெஸ்ட் போட்டி

# லாங்வேல்ட், நிற்றினி அபாரப் பந்து வீச்சு; 163 ஓட்டங்களில் சுருண்டது இங்கிலாந்து



இங்கிலாந்து-தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் கேப்டவுனில் நடைபெற்றுவரும் மூன்றாவது டெஸ்ட் போட்டியில் தென்னாபிரிக்காவின் கை ஓங்கியுள்ளது.

தென்னாபிரிக்கா முதல் இன்னிங்சிற்கு பெற்ற 441 ஓட்டங்களுக்குப் பதிலளித்து ஆடிய இங்கிலாந்து தென்னாபிரிக்க பந்து வீச்சாளர் லாங்வேல்ட், நிற்றினி ஆகியோரின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாது 163 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

துடுப்பாட்டத்தில் அன்ருஸ்ரோஸ் 45 ஓட்டங்களையும், ரெஸ்கொதிக் 28 ஓட்டங்களையும், ஹைல்ஸ் ஆட்டமிழக்காது 31 ஓட்டங்களையும் அதிகபட்சமாகப் பெற்றனர்.



பந்து வீச்சில் லாங்வேல்ட் 16 ஓவர்கள் பந்து வீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து ஐந்து விக்கெட்டுக்களையும், நிற்றினி 19 ஓவர்கள் பந்து வீசி 50 ஓட்டங்களைக் கொடுத்து நான்கு விக்கெட்டுக்களையும், பொலக் ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

இங்கிலாந்து அணி பலஓன் நிலைக்கு உள்ளான போதும் இங்கிலாந்துக்கு மீண்டும் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை வழங்காது 278 ஓட்டங்கள் முன்னிலையில் தனது இரண்டாவது இன்னிங்சை ஆடும் தென்னாபிரிக்கா நேற்றைய மதிய போசன இடைவேளையின் போது மூன்று விக்கெட்டுக்களை இழந்து 109 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இதில், முதல் இன்னிங்சில் சதமடித்த கலிஸ் ஆட்டமிழக்காது 34 ஓட்டங்களையும், கிப்ஸ் 24 ஓட்டங்களையும், ருடெல்ப் 23 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் ஹொக்காட், பிளின்டொப், ஜோன்ஸ் தலா ஒவ்வொரு விக்கெட்டை கைப்பற்றியிருந்தனர்.

# ரிக்கி பொண்டிங் இரட்டைச் சதம், கில்கிறிஸ்ட் சதம்

## சிட்னி டெஸ்ட்டில் அவுஸ்திரேலியா வலுவான நிலையில்

பாகிஸ்தானுக்கு எதிராக சிட்னியில் நடைபெற்று வரும் மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டியில் ரிக்கிபொண்டிங் பெற்ற இரட்டைச் சதம் மற்றும் கில்கிறிஸ்டின் சதம் என்பவற்றின் உதவியுடன் அவுஸ்திரேலிய அணி முதல் இன்னிங்சில் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுள்ளது.

பாகிஸ்தான் அணி முதல் இன்னிங்சில் 304 ஓட்டங்கள் எடுத்தது. பின்னர் முதல் இன்னிங்சை விளையாடிய அவுஸ்திரேலியா 2 ஆவது நாள் ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 340 ஓட்டங்கள் எடுத்திருந்தது. பொண்டிங் 155 ஓட்டங்களுடனும், கில்கிறிஸ்ட் 7 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

நேற்று 3 ஆவது நாள் ஆட்டம் நடந்தது. மழையால் ஆட்டம் தொடங்குவதில் தாமதம் ஏற்பட்டது. பின்னர் இருவரும் தொடர்ந்து ஆடினார்கள். கில்கிறிஸ்ட் மிகவும் சிறப்பாக விளையாடி 'சதம்' அடித்தார்.



அவர் 120 பந்துகளில் 14 நான்கு, 5 ஆறு ஓட்டங்களுடன் 113 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.



அதைத் தொடர்ந்து ரிக்கி பொண்டிங் சிறப்பாக விளையாடி இரட்டைச் சதம் அடித்தார். 316 பந்துகளில் 30 நான்கு ஓட்டங்களை அடித்து அவர் 200 ஓட்டங்களை எடுத்தார்.

ரிக்கிபொண்டிங்கின் 4 ஆவது 'இரட்டைச் சதம்' இதுவாகும். 207 ஓட்டம் எடுத்து இருந்தபோது அவர் ஆட்டமிழந்தார்.

அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 568 ஓட்டம் குவித்து அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது. பாகிஸ்தான் தரப்பில் டேனிஷ்கனேரியா 7 விக்கெட்டுக்களையும், நவீத் உல் ஹசன் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர். 264 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் 2 ஆவது இன்னிங்சை ஆடும் பாகிஸ்தான் மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 67 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

## சுனாமி நிவாரணத்துக்கு பார்த்தீவ்பட்டேல் அன்பளிப்பு




சுனாமி நிவாரணத்துக்கு இந்திய கிரிக்கெட் அணியின் விக்கெட் காப்பாளர் பார்த்தீவ் பட்டேல் 2 இலட்சம் இந்திய ரூபாய்களை வழங்கியுள்ளார். இளம் வீரர்கள் மற்றும் சிறுவர்களிடம் இருந்து அவர் இந்த நிதியைப் பெற்றுள்ளார்.

பார்த்தீவ் பட்டேல் பிரதமர் மன்மோகன்சிங்கைச் சந்தித்து பிரதமர் நிவாரணத்துக்கு ரூ. 2 இலட்சம் வழங்கினார்.

# ஆசிய 11 பேர் அணி அறிவிப்பு

# கங்குலி தலைவர்: முரளி பங்கேற்கிறார்





சுனாமி நிதிக்காக நடத்தப்படும் ஆசிய கிரிக்கெட் அணிக்கு கங்குலி தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி செய்யும் வகையில் சர்வதேச கிரிக்கெட் சம்மேளனம் சார்பில் கிரிக்கெட் பந்தயம் நடத்தப்படவுள்ளது. முதல் ஒருநாள் போட்டி வரும் 10 ஆம் திகதி மெல்பேர்ன் மைதானத்தில் நடக்கிறது. சர்வதேச 11 பேர் மற்றும் ஆசிய 11 பேர் அணிகள் இந்தப்போட்டியில் பலப்பரீட்சை நடத்த இருக்கின்றன.

இந்தப் போட்டிக்கான ஆசிய 11 பேர் கிரிக்கெட் அணிக்கு இந்தியாவின் சவுரவ் கங்குலி தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை மற்றும் வங்கதேச கிரிக்கெட் சங்கங்களின் தேர்வுக்குழுத் தலைவர்கள் ஆசிய அணிக்கான வீரர்களை நேற்று முன்தினம் அறிவித்தனர்.

இதன்படி சவுரவ் கங்குலி தலைவர். சனத்ஜெயசூரிய, அத்தப்பத்து, ஷேவாக், ராவிட், யுகானா, கபாலி, சங்கக்கார, சமிந்தவாஸ், அக்தர், ஜாகீர்கான் அனில்கும்ளே, முத்தையா முரளிதரன், சச்சின்டெண்டுல்கர் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். பாகிஸ்தான் அணித்தலைவர் இன்சமாம், இந்தியாவின் லட்சுமன் ஆகியோருக்கு அணியில் வாய்ப்பு கிடைக்கவில்லை. இன்சமாம் காயம் காரணமாக அவதிப்பட்டு வருவதால் அவரின் பெயர் பரிசீலிக்கப்படவில்லை 2-ஆவது மோதல் ஆசியாக் கண்டத்தில் நடக்கவுள்ளது.இந்தப்போட்டி நடக்கும் திகதி இன்னும்முடிவு செய்யப்படவில்லை.

## தயங்குகிறது மேற்கிந்தியத்தீவு



சுனாமி நிவாரண நிதிக்கான உலக 11 பேர் அணியில் பிரையன் லாராவைக் களமிறக்க மேற்கிந்தியத்தீவு கிரிக்கெட் நிர்வாகம் தயங்குகிறது.

அவுஸ்திரேலியா, பாகிஸ்தானுடன் 14 ஆம் திகதி தொடங்கும் முத்தரப்பு ஒரு நாள் தொடரில் பங்கேற்க மேற்கிந்தியத்தீவு அணி தற்போது மெல்பேர்ன் சென்றுள்ளது. முக்கியமான இந்தத் தொடருக்கு முன்னதாக,லாரா போன்ற நட்சத்திர வீரர்கள் காயமடைந்து விட்டால் கஷ்டமே என்று மேற்கிந்திய தீவு கிரிக்கெட் நிர்வாகம் தயங்கியது. முதல் போட்டி 10ஆம் திகதி மெல்பேர்ன் நகரில் நடக்கிறது. இரண்டாவது போட்டி மார்ச் அல்லது ஏப்ரலில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.


## இங்கிலாந்து கிரிக்கெட் அணித் தலைவர் வோகன் பயிற்சியின்போது காயம் அடைந்துள்ளார்



இங்கிலாந்து கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவுடன் டெஸ்ட் போட்டியில் மோதி வருகிறது. முதல் டெஸ்ட் போட்டியில் கிடைத்த வெற்றியுடன் 1-0 என்ற புள்ளியில் முன்னணி பெற்றிருக்கும் இங்கிலாந்து அணி தற்போது 3-ஆவது டெஸ்டில் ஆடி வருகிறது. நேற்று முன்தினம் 2-ஆவது நாள் ஆட்டம் தொடங்குவதற்கு முன்பாக வீரர்கள் பயிற்சி மேற்கொண்டனர். அப்போது வோகனின் இடது கையில் காயம் ஏற்பட்டது. உடனடியாக அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.அவரது கையில் எக்ஸ்ரே பரிசோதனை நடத்தப்பட்டது.இதில் அவரது கையில் இலேசான எலும்பு முறிவு ஏற்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டது.நேற்று முன்தின ஆட்டத்தில் இதன் காரணமாக அவர் ஆடவில்லை .




## லியாண்டர் பயஸ் தோல்வி



சென்னை ஓபன் டென்னிஸ் போட்டியின் தொடக்க நாளான திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் இந்தியாவின் லியாண்டர் பயஸ் தோல்வியடைந்தார். இப்போட்டிக்கான தகுதி நிலையில் 6-ஆவது இடத்தில் உள்ள தைபேயின் யென்ஹூ சைன்லூ,6-2,7-6 என்ற செட்கணக்கில் வென்றார். சாதாரணமாக ஒற்றையர் பிரிவில் அதிகம் விளையாடாத பயஸ், முதல்செட்டில் எதிர்ப்பு எதையும் காட்டவில்லை. அதேநேரத்தில் இரண்டாவது செட்டில் தனது அதிரடி ஆட்டத்தைக் காண்பித்தார். ஆனாலும்தோல்வியையே சந்தித்தார்.

## கனெரியாவுக்கு அபராதம்

அவுஸ்திரேலியா- பாகிஸ்தான் அணிகள் இடையேயான கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி சிட்னியில் நடந்து வருகிறது. இந்தப் போட்டியின்போது பாகிஸ்தான் வீரர் டானிஸ் கனெரியா, அவுஸ்திரேலிய வீரர் மைக்கேல் கிளார்க்கை ஆக்ரோஷமாகத் திட்டினார். இது குறித்து போட்டி நடுவர்கள் விசாரணை நடத்தினார்கள். இதன் முடிவில் கனெரியாவுக்கு இந்த போட்டிக்கான முழுக்கட்டணமும் அபராதமாக விதிக்கப்பட்டது.



பேர்த்தில் நடைபெறும் காத்மேன் கோப்பைக்கான டென்னிஸ்போட்டியில் பெண்கள் பிரிவில் அவுஸ்திரேலியாவின் அலிசியா மோலிக் 6-3, 6-3 என்ற நேர் செட்களில் ஸ்லோவாகியாவின் ஹண்டுசோவாவை வீழ்த்தினார்.

## சிம்பாப்வேக்கு எதிரான டெஸ்ட் வங்கதேச அணியில் இனாமுல்ஹக்


சிம்பாப்வே அணிக்கு எதிரான கிரிக்கெட் டெஸ்ட்தொடரில் விளையாட வங்கதேச அணியில் மீண்டும் இனாமுல்ஹக்(வயது - 18) சேர்க்கப்பட்டுள்ளார். இடது கை சுழற்பந்து வீச்சாளரான இனாமுல்ஹக் இந்தியாவுக்கு எதிரான தொடரில் விளையாடவில்லை. கடைசியாக நியூசிலாந்துக்கு எதிராக விளையாடினார்.

இந்நிலையில் வரும் வியாழக்கிழமை சிட்டகொங்கில் தொடங்கவுள்ள டெஸ்டில் இனாமுல்ஹக் விளையாடும் வாய்ப்பைப் பெற்றுள்ளார்.

## கிரிக்கெட் நிர்வாகிகளை அசரவைத்த அவுஸ்.ரசிகர்களின் மனிதநேயம்

அவுஸ்திரேலியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையே மூன்றாவது கிரிக்கெட் டெஸ்ட் சிட்னியில் நடந்து வருகிறது. இந்த டெஸ்ட்டில் ஒவ்வொருநாளும் போட்டியைக் காண வரும் ரசிகர்களிடம் இருந்து 'சுனாமி நிவாரண நிதி' திரட்ட முடிவு செய்யப்பட்டது. போட்டியின் முடிவில் ரூ.65 இலட்சம் வரை திரட்ட வேண்டும் என்பது ஆஸி.கிரிக்கெட் நிர்வாகத்தின் விருப்பம். ரசிகர்களின் மனிதநேயமோ ஆஸி.கிரிக்கெட் நிர்வாகிகளை அசர வைத்திருக்கிறது. கடந்த 2 நாளில் கிடைத்த தொகை மட்டும் ரூ.41 இலட்சத்தைத் தொடுகின்றது. இன்னும் 3 நாட்கள் பாக்கி இருப்பதால், எதிர்பார்ப்பைத் தாண்டி நிதி குவியும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## சிந்தனைக்கு



அடக்குமுறையாளர்கள் போராளிகளை அழிப்பதில் காட்டும் தீவிரத்தைவிட, பொதுமக்களின் ஆன்மீக உறுதியை உடைக்க வேண்டும் என்பதில்தான் அதிக அக்கறை காட்டுகின்றனர்.

தமிழீழ தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ்.சாலை,கிளிநொச்சி. 05-01-2005
தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல் Daily@eezhanatham.com

## துரதிர்ஷ்டம்!

சந்திரிகா குமாரதுங்க போன்று பொய் பேசுபவர்–உண்மைக்கு மாறாகக் கதைப்பவர் சனாதிபதியாகக் கிடைத்துள்ளமை இந்நாட்டிற்கு ஏற்பட்டுள்ள துரதிர்ஷ்டமே. அவர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அனர்த்தத்திலும், பேரிழப்பிலும்கூட உண்மை பேசுபவராக, மனிதாபிமானமும், இரக்கத்தனம் கொண்டவராக இல்லை.

நேற்று முன்தினம் (திங்கட்கிழமை) அவர் வெளியிட்ட கருத்தொன்றின் அடிப்படையில், இரண்டு தினங்களுக்கு முன் வரையில் 2000 மெ.தொன் எடையுடைய அடிப்படை உணவுப் பொருட்களைக் கிளிநொச்சி, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு மாவட்டங்களுக்குத் தமது அரசு அனுப்பிவைத்துள்ளதாகத் தெரிவித்துள்ளதோடு, இம்மாவட்டங்களைவிட தென்மா காணத்தில் மூன்று மாவட்டங்களில் ஐந்து ஆறு மடங்கு அதிகமான மக்கள் இறந்துள்ளபோதும் அவற்றிற்கு நாம் 180 மெற்றிக்தொன் உணவையே அனுப்பிவைத்துள்ளோம"எனத் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா கடந்த காலத்திலேயே தான் ஒரு சிறுமைத்தனம் மிக்கவர் என்பதைத் தமிழ் மக்கள் விடயத்தில் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால், தற்பொழுது இயற்கை அனர்த்தம் ஒன்று ஏற்பட்டுள்ள நிலையிலும் அவர் இவ்வாறு பேசுவதென்பது அவரின் இனவிரோத சிந்தனையையும், செயலையுமே வெளிக்காட்டுவதாகவுள்ளது.

சனாதிபதி சந்திரிகா உண்மைக்கு மாறாகப் பேசுபவர் என்பது ஏற்கனவே அறியப்பட்டதொன்றுதான். ஆனால், மக்களுக்கு ஏற்பட்ட அழிவு விவகாரத்திலும் இவ்வாறு பேசுவார் என்பது அவர் எத்தகைய மோசமானவர் என்பதையே வெளிப்படுத் துவதாய் உள்ளது. அத்தோடு, தனது பேச்சில் ஒன்றைத்தானும் அவர் உண்மையாகப் பேசவில்லை என்பது முக்கியமானதாகும்.

அதாவது, வடக்கிலுள்ள மூன்று மாவட்டங்களுக்கும் அவர் 2000 மெற்றிக்தொன் உணவுப் பொருட்களை அனுப்பியுள்ளமை என்பது அப்பட்டமான பொய்யாகும். அரசாங்கத்திடம் இருந்து சிலநூறு தொன் உணவுப் பொருட்கள் அனுப்பப்பட்டன என்பதும், அதுவும் காலம் தாழ்த்தி அனுப்பப்பட்டது என்பதுமே உண்மை யாகும்.

இது ஒருபுறம் இருக்கத் தென் மாவட்டங்களுக்கு ( காலி, அம்பாந்தோட்டை, மாத்தறை) 180 மெற்றிக்தொன் உணவு மட்டுமே அனுப்பியுள்ளதாகக் கூறுவது "பொய் கூறினும் பொருந்தக் கூற வேண்டும்; என்பதையே ஞாபகப்படுத்துவதாய் உள்ளது. ஏனெனில், தென் மாகாணத்திற்கே அரசின் அவரச உதவியும், அதிகூடிய உதவிகளும் வழங்கப்பட்டன என்பதும் இவை பல ஆயிரம் மெற்றிக் தொன் அளவுடையவை என்பதும் ஊரறிந்த ரகசியம்

உதவி வழங்குதல் இவ்வாறானதாக இருக்கையில், சனாதிபதியின் ஒப்பீடானது ஒரு வகையில் சிறுபிள்ளைத் தனமானதாகவும், இன்னொரு புறத்தில், தமிழ் மக்களின் அவலத்தை அலட்சியப்படுத்துமாப் போன்றதாகவும் உள்ளது. அதாவது, வடக்கு மாவட்டங்களில் ஏற்பட்டதைவிட ஐந்து ஆறு மடங்கு உயிர்ச் தேசம் தெற்கில் ஏற்பட்டுள்ளது எனச் சனாதிபதி கூறுவது அவர் தமிழ் மக்களின் துயரை இருட்டடிப்புச் செய்ய முற்படுவதாகவே கொள்ள வேண்டியுள்ளது.

ஏனெனில், சனாதிபதி சந்திரிகா குறிப்பிடுவது போன்று வடக்கு மாவட்டங்களில் இறந்தோர் தொகையைவிட தென் மாவட்டங்களில் இறந்தோர் தொகை ஆறு ஏழு மடங்கு அதிகம் என்பது அரசாங்கத் தரப்பு தகவலுக்கே முரண்பாடானது.

எடுத்துக்காட்டாக, முல்லைத்தீவில் இறந்தோர், காணாமற்போனோர் தொகை 4300 ஆகவும், யாழ். இல் 3180 ஆகவும் கிளிநொச்சியில் 616 ஆகவும் இருக்கையில் காலியில் இறந்தோர் 3941 பேர் ஆகவும், மாத்தறையில் இறந்தோர், காணாமற்போனோர் 1358 பேர் ஆகவும், அம்பாந்தோட்டையில் இருக்கையில் இறந்தோர் 4500 ஆகவுமே உள்ளது. இந்த நிலையில் எவ்வாறு இது வடக்கு மாவட்டங்களைவிட ஐந்து ஆறு மடங்காகும்.

இவை ஒருபுறம் இருக்க, தென்மாவட்டங்களில் காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை மாவட்டங்களுக்கும், முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கும் இடையிலான குடித்தொகை விகிதாசாரத்தை ஒப்புநோக்கின் வடக்கு மாவட்டங்களின் உயிரிழப்பு விகிதாசரம் எந்தளவிற்கு உயர்வானது என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

எடுத்துக்காட்டாக, வடக்கில் அதிகமான சேதத்திற்குள்ளான மாவட்டமான முல்லைத்தீவில் இவ் அனர்த்தத்தினால் இறந்தோர் / காணாமற்போனோர் மாவட்ட மொத்த சனத் தொகையில், 3.31 வீதமாகும். இதேவேளை, தெற்கில் உயர்ந்தளவு உயிரிழப்பு ஏற்பட்ட மாவட்டமான அம்பாந்தோட்டையில் இறந்தோர் வீதம் 0.85 வீதமாகும்.அதிலும் தமிழர் தாயகம் என்ற ரீதியில் நோக்குகையல மொததத் தொகையிலும் சரி விகிதாசாரத்திலும் சரி வடக்கு–கிழக்கே பேரழி வைச் சந்தித்துள்ளமை வெளிப்படும்

இத்தகைய நிலையானது சனாதிபதி சந்திரிகாவின் புள்ளி விபரங்கள் எத்தனை தூரம் உண்மைத் தன்மைக்கு மாறானவை என்பதைப் புரிந்து கொள்ளப் போதுமானதாகும். சனாதிபதி சந்திரிகா யுத்த காலத்தின் மத்தியில்தான் உண்மைக்கு மாறான புள்ளி விபரங்களை வெளியிட்டு வந்தார் எனின் தற்பொழுது இயற்கை அனர்த்தத்திலும் இத்தகைய புள்ளி விபரங்களை வெளியிடுகின்றமை அவர் என்றுமே நம்பிக்கைத் தன்மை அற்றவர் என்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது.

# அமெரிக்காவின் நடவடிக்கைகள்; ராஜதந்திர வட்டாரங்களில் சந்தேகம்

(கொழும்பு)

சுனாமி அலைகளினால் பேரழிவைச் சந்தித்துள்ள இலங்கைக்கு மீட்பு மற்றும் புனரமைப்புப் பணிக்கென அனுப்பட்டுள்ள அமெரிக்க இராணுவத்தினர் தாம் நிலை கொள்வதற்கென மேற் கொள்ளும் பெரும் எடுப்பிலான நடவடிக்கைகள் இராஜதந்திர வட்டாரங்களில் பலத்த சந்தேகங்களையும், கேள்வியையும் எழுப்புவதாக உள்ளது. ஏனெனில், அமெரிக்க இராணுவம் சில இடங்களில் முகாம் அமைப்பதற்கு மேற்கொள்ளும் முயற்சிகள் நம்பிக்கையை வளர்ப்பதாக இல்லை.

அமெரிக்க கடற் படையினர் கட்டுநாயக்க வானூர்தித் தளத்தின் அருகில் தற்காலிக முகாம் ஒன்றையும் அமைத் துள்ளனர். ஏற்கனவே இலங் கைக்கு வானூர்தி மூலம் நேற்று முன்தினம் மாத்திரம் 42 கடற் படையினர் வருகை தந்தனர். அதே நேரம் இலங்கைக்கு நிவாரணப் பணிகளுக்காக கொண்டு வரப்பட்டுள்ள வானூர்திகள் மற்றும் கப்பல்கள் மூலம் இதுவரை இருநூறுக்கும் மேற்பட்ட அமெரிக்கக கடற்படையினர் இலங்கைக்கு வந்துள்ளனர். இவர்களுடன் 20 உலங்குவானூர்திகள். இரண்டு உதவிக்கப்பல்கள் மற்றும் சரக்குக் கப்பல்களும் இலங்கைக்கு எடுத்துவரப்படுகின்றன. இதனைத் தவிரபிரித்தானியா. இந்தியா, பாகிஸ்தான பங்களாதேஷ் ஆகிய நாடுகள் தொடர்ந்தும் இலங்கையின் நிவாரணப்பணிகளின் நிமித்தம் தமது துருப்புக்களை அனுப்புகின்றன. நேற்று மாத்திரம் அமெரிக்காவின் பல வானூர்திகள் கட்டுநாயக்கவுக்கு வந்துள்ளன கட்டுநாயக்கவில் அமைக்கப்படும் அமெரிக்க கடற்படை முகாமுக்கான பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்களை ஏற்றிய நிலையில் இவை வந்துள்ளன. சி 5 என்ற அதிவேக வானூர்தியில் நேற்றுப் பிற்பகல் 2.25 அளவில் 30 அமெரிக்கக் கடற் படையினர் வந்துள்ளனர். பிற்பகல் 3.40 அளவில் மற்றும் ஒரு சி 5 ரக வானூர்தியில் கடற்படை முகாமுக்கான பெருமளவு பொருட்கள் எடுத்து வரப்பட்டன. 3.31 மணியளவில் பிளக் கவாக் என்ற ரகத்தைச் சேர்ந்த 2 உலங்கு வானூர்திகள் கட்டுநாயக்கவை வந்தடைந்தன 5.51இற்கு மேலும் பல அமெரிக்கக் கடற்படையினர் வந்தடைந்தனர் இந்த நிலையில் நேற்று மாத்திரம் சுமார் 70 அமெரிக்க கடற்படையினர். இலங்கைக்கு வந்துள்ளனர். (32)

# திருக்கோவிலில் நிவாரணப் பொருட்களை வழிப்பறி செய்த அதிரடிப்படை

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் பிரதேசத்தில் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிவாரணப் பணிகளில் விசேட அதிரடிப்படையினர் அத்துமீறி நடந்து கொள்வதாக விடுதலைப் புலிகளினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நேற்று திருக்கோவில் விநாயகபுரம் பகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிவாரணப் பொருட்களை காஞ் சுரங்குடா விசேட அதிரடிப்படை முகாம் முன்பாக வழிமறித்த விசேட அதிரடிப்படையினர் கிராம சேவை யாளர் உட்பட நிவாரணப் பணியாளர்களை விரட்டிவிட்டு அப் பொருட்களைப் பறிமுதல் செய்துள்ளார்கள். இந்தப் பொருட்களை தம் விருப்பப்படி விசேட அதிரடிப்படையினர் விநியோகம் செய்துள் ளார்கள். இதே வேளை நிவாரண வேலைகளில் ஈடுபட்டிருந்த விடுதலைப்புலிகளின் பெண் போராளி யொருவர் விசேட அதிரடிப்படையி னரால் தாக்கப்பட்ட சம்பவமொன் றும் நேற்று இடம் பெற்றுள்ளது. தமது போராளிகள் மீது விசேட அதிரடிப் படையினர் தகாதவார்த்தைப் பிரயோகங்கள் செய்ததாகவும் விடுதலைப்புலிகளினால் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்தை விடுதலைப் புலி களின் மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் குயிலின்பன் வன்மையாகக் கண்டித்துள்ளார். விசேட அதிரடிப் படையினரின் இத்தகைய நடவடிக்கைகளானது புனர்வாழ்வுப் பணிகளில் ஈடுபட்டுள்ள அமைப்புகளுக்கும், தமது போராளி களுக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தல் என்றும் குறிப்பிட்ட அவர் இது தொடர்பாக போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம்புகாரும்செய்துள்ளார்.

# நலன்புரி நிலையங்களிலுள்ளோருக்கு இந்திய மருத்துவக்குழு சிகிச்சை

கடற்கொந்தளிப்பால் முல்லை மாவட்டத்தில் ஏற்பட்ட அனர்த்தத்தில் பாதிக்கப்படட மக்களுக்கு சேவை செய்வதற்காக இந்தியாவில் கேரளம் மற்றும் தமிழ் நாட்டைச் சேர்ந்த 05 மருத்துவர்கள் அடங்கிய 08 பேர் கொண்ட குழுவொன்று முல்லைத்தீவுக்கு வருகை தந்துள்ளனர். இவர்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையுடன் செஞ்சிலுவைச் சங்கம் முல்லைக் கிளையுடன் இணைந்து நேற்று முன்தினம் குமுழமுனை நலன் புரிநிலையங்களில் மருந்துவ சேவையினை நடத்தியுள்ளனர். இச்சேவையின் போது 92 குழந்தைகள் உட்பட 311 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர் டாக்டர்களின் கருத்துப்படி இன்னும் அதிர்ச்சியில் இருந்து விடுபடாத பல நோயாளிகள் காணப்படுவதாகவும், இவர்களுக்கான சிகிச்சையும், விரைவாகச் செய்யப்படவேண்டும் எனவும் இதற்கான முயற்சியும் தங்களால் எடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறினர் மேலும் அனர்த்தத்தின்போது நோய் வாய்ப்பட்டுள்ளவர்களையும் நலன்புரி நிலையங்களில் இருந்து மேலதிக சிகிச்சைக்காக வரும் நோயாளர்களையும் நேற்று முள்ளியவளை மத்திய மருந்தகத்திலும் வித்தியானந்தாக் கல்லூரியிலும் பார்வையிட்டுள்ளார்கள். (08)

# தட்டுப்பாடு தொடர்கிறது

கோதுமை மாவிற்கான தட்டுப்பாடு தொடர்ந்தும் தீவிரமாகி வருவதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது இதன் காரணமாக ஒரு கிலோ கோதுமை மா 35 ரூபா முதல் 40 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன இதனால் கோதுமை மாவைப் பிரதான உணவாக உட்கொள்ளும் தோட்டத் தொழிலாளர்கள் பாரிய பிரச்சினைகளுக்கு உட்பட்டுள்ளதுடன் பல வெதுப்பகங்களும் மூடப்படும் நிலைக்கு உள்ளாகியுள்ளன.

இது தொடர்பாக பிரிமா ஆலையின் மத்திய பிராந்திய நிறைவேற்று அதிகாரி ரசிகடி சொய்ஸாவை தொடர்பு கொண்ட போது தமது நிறுவனம் வழங்குகின்ற கோதுமை மாவை அதிக விலைகளுக்கு முகவர் களும மற்றும் கூட்டுறவுச் சங்கங்களும் விற்பனை செய்து வருவதன் காரணமாகவே கோதுமை மாவிற்கு செயற்கைத் தட்டுபாட்டு நிலை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார் (32)

# கரணவாய் பகுதி கிணற்றிலிருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(வடமராட்சி)

கரணவாய் தூதாவளை செம்பாடுப் பகுதியிலுள்ள கிணற்றிலிருந்து ஆணின் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

கிணற்றில் இருந்து மீட்கப்பட்ட சடலம் 58 வயதுடைய அண்ணாசிலையடி,கரணவாய் தெற்கு கரணவாயைச் சேர்ந்த குமார் சின்னத்துரை என்பவருடையது ண அடையாளம் காணப்பட்டுளளது.

இதுபற்றி மேலும் தெரியவருவதாவது; நேற்று முன்தினம் மாலை 6.00 மணியளவில் வீட்டில் இருந்து புறப்பட்டுச்சென்றவர் இரவு வெகுநேரமாகியும் வீட்டிற்கு திரும்பாததையிட்டு இவரின் மனைவி தேடத்தொடங்கினார். மேற்படி நபர் வேலை செய்யும் மரக்காலைக்குச் சென்று பார்த்தபோதும் அவர் அங்கு இல்லையென அறிந்து கொண்டார்.

இந் நபரின் உந்துருளியை கரண வாய் மூத்தவிநாயகர் பகுதியில் உள்ள மதில் கரையுடன் கண்ட பிறிதொரு நபர் இவரைக் காணாது தேடிக் கொண்டிருக்கும் உறவினரி டம் தெரியப்படுத்தினார்.

உந்துருளி காணப்பட்ட இடத்திற்கு வந்த உறவினர் அருகில் உள்ள தோட்டப பகுதியில் தேடுதலை மேற்கொண்டபோது தோட்டக் கிணற்றில் சடலம் மிதப்பதனைக் கண்டனர். உடனடியாக நெல்லியடி பொலிசாருக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன் உடனடியாகப் பொலிசார் மாவட்ட நீதிவான் க.அரியநாயகம் அவர்களை அழைத்துக்கொண்டு சம்பவ இடத்திற்கு வந்து பார்வையிட்டு சடலத்தை வைத்திய பரிசோதனைக்காக மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தார்.

சடலத்தைப் பரிசோதித்த மந்திகை மாவட்ட வைத்திய அதிகாரி கதிரவேல்ப்பிள்ளை அவரின் காதுப்பக்கத்தில் அடிகாயங்கள் காணப்படுவதாகவும் இவரை அடித்தே கிணற்றுக்குள் போடப்பட்டிருக்கலாம் என அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

இது தொடர்பான விசாரணையை மேற்கொள்ளுமாறும் மாவட்ட நீதவான் க.அரியநாயகம் உத்தர விட்டுள்ளார். (கா)

# நிவாரணப் பணிகளுக்குப் பொறுப்பாக இராணுவத் தளபதிகள் நியமனம்

கடல் கொந்தளிப்பினால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்படவிருக்கும் சகல நிவாரண நடவடிக்கைகளும் முப்படைகளின் கீழ் சனாதிபதியினால் கொண்டு வரப்பட்டுள்ளது. இதன் பிரகாரம் தற்போது மேற்படி மாவட்டங்களிற்கான கட்டளை அதிகாரிகளாக உள்ளவர்களின் கீழேயே நிவாரண நடவடிக்கை கொண்டுவரப்பட்டுள்ளது.

சனாதிபதியின் இந்தத் தீர்மானத்திற்கு அமைய தமிழர் தாயகம் உட்பட 12 மாவட்டங்களுக்கும் (கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டம் தவிர) இராணுவ அதிகாரிகள் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.நிவாரண நடவடிக்கைகள், பாதுகாப்பு, நலன்புரி, மற்றும் வைத்திய நடவடிக்கைகள் உட்பட அனைத்துப் பணிகளும் இவர்களின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகள் ஏற்கனவே மாவட்டங்களிலுள்ள 12இராணுவ இணைப்பு அதிகாரிகளுடன் இணைந்து புனர்வாழ்வு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபடுவார்கள். அம்பாறை மாவட்டம் கேர்னல் என்.ஏ.ஜே.சி. டயஸ், திருமலை மாவட்டம் மேஜர்ஜெனரல் எஸ்.ஆர்.பால சூரிய, வவுனியா மாவட்டம் மேஜர் ஜெனரல் பி.எஸ்.பி. குலதுங்க, மட்டக்களப்பு மாவட்டம் பிரிகேடியர் வஜிர விஜயகுணவர்தனா, யாழ்ப்பாணம் மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன். குறிப்பிட்ட இராணுவ அதிகாரிகளே இம் மாவட்டங்களின் இராணுவக் கட்டளை அதிகாரிகளாக ஏற்கனவே பணியாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நியமனங்கள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டுள்ள பல்வேறு அமைப்புகள் தமது அதிருப்தியையும் கண்டனத்தையும் வெளியிட்டுள்ளன. இந்தச் செயற்பாடு இனவாதம் வளர்வதற்கும், தமிழர்கள் நிவாரணங்களில் ஒதுக்கப்படுவதற்குமே வழிவகுக்கும் என்பதே இவ் அமைப்புக்களின் கருத்தாக உள்ளது.

# கோண்டாவில் பகுதியில் இரு சிறுவர்களைக் காணவில்லை

கடைக்கெனப் புறப்பட்டுச் சென்ற சிறுவர்கள் இருவர் கோண்டாவில் பகுதியினில் காணாமற் போயுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்.பணிமனையில் முறைப்பாடொன்று நேற்றுச் செய்யப்பட்டுள்ளது.

பெற்றோரால் செய்யப்பட்டுள்ள இம் முறைப் பாட்டினில் கோண்டாவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயத்தினைச் சேர்ந்த தனபாலசிங்கம் ஜீவகுமாரெனும் 13 வயதுடைய சிறுவனும் அவனுடன் கூடிச் சென்ற குணபாலசிங்கம் வேஷ்குமார் எனும் 10 வயதுடைய சிறுவனுமே காணாமற் போயுள்ளதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. இச்சிறுவன் உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் பிற்பகல் வேளை உரும்பிராய் செல்வபுரம் பகுதியிலுள்ள தமது வீட்டிலிருந்து கடைக்கெனப் புறப்பட்டுச் சென்ற இச் சிறுவர்கள் இருவரும் பின்னர் வீடு திரும்பியிருக்க வில்லையென அம்முறைப்பாட்டினில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (27)

## வட-கிழக்கு...

மக்களை சென்றடைவதைத்தான் உறுதிப்படுத்துவேன் எனவும் கூறியுள்ளார். நேற்று நண்பகல், ஆழிப்பேரலைகளால் பாதிக்கப்பட்ட தெற்காசிய சமூக மக்களை பிரதமர் சந்தித்துள்ளார். தமிழர்கள் பெருமளவில் வாழ்ந்துவரும் ஸ்காபுரோவில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் தமிழ் சமூகத்தைச் சேர்ந்த பலரும் பங்குபற்ற அழைக்கப்பட்டிருந்தனர். மாநாட்டின்போது, சிறிலங்காவின் வடக்குக் கிழக்குக்கு, நிவாரண உதவிகள் செல்வதில் தடங்கல்கள் ஏற்படுத்தப்படுவது குறித்து பிரதமரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டது. அதற்குப் பதிலளித்த பிரதமர் கனேடிய உதவிகள் தேவையான இடங்களுக்குச் சென்றடைவதை தான் உறுதிசெய்வதாக வாக்களித்துள்ளார். இந்த மாநாட்டைத் தொடர்ந்து நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலும், வடக்குக்கிழக்குக்கு உதவிகள் செல்வதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் பற்றி ஊடகவியலாளர்களால் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது. சிறிலங்காவில் நிலவும் உண்மை நிலைகளை அறிவதற்கு, தான் மக்களின் உதவியையும் நாடியிருப்பதாகத் தெரிவித்த பிரதமர், அங்கு நிலவும் நிலைமைகளை தான் தொடர்ந்து அவதானித்து வருவேன் எனவும் கூறியுள்ளார். ஆழிப்பேரலைகளால் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள தெற்காசிய நாடுகளுக்கு கனடா 80 மில்லியன் டொலர்களை உதவியாக வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பாதிக்கப்பட்ட...

இழந்திருந்தனர். இந்நிலையில் 'சுனாமி' கடற்கொந்தளிப்பு முல்லைத்தீவையும்,வடமராட்சி கிழக்கையும் முழுமையாக அழித்து விட்டது. இதில் பல ஆயிரம் பேர் உயிரிழந்திருக்கிறார்கள். கரையோரப் பகுதிகள் முழுமையும் அழிவடைந்து அவர்களின் தொழிலும் போய் விட்டது. இந்நிலையில் இழப்புக்கள் இந்தப் பகுதிகளைச் சேர்ந்த ஒவ்வொருவரையும் பாதித்திருக்கிறது. இத்தனை எவராலும் ஈடுசெய்துவிட முடியாது. மக்களின் வேதனைகளை யாரும் தீர்த்துவிட முடியாது. இன்று எங்கள் பகுதிகளுக்கு, அரசாங்கம் எதையும் செய்யவில்லை. ஆனால் பெரும் சேதத்துக்குள்ளான முல்லை, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளில் நாங்கள் எமது வளங்களைப் பயன்படுத்த எங்கள் மனதுக்கு திருப்தி தரக்கூடிய வகையில் மீட்புப் பணியை நிறைவு செய்திருக்கின்றோம். இதற்காக எங்கள் படையணிகளின் முழுமையான பலத்தையும், பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த அதிவேக உந்துருளிப்படை உட்பட அனைத்துப் படைப்பிரிவுகளையும் பயன்படுத்தி மீட்பு நடவடிக்கைகளை முடித்திருக்கின்றோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட பகுதிகளைக் கட்டி எழுப்புவதற்கு சர்வதேச சமூகம் பாரிய உதவிகளை வழங்க வேண்டும்.அதன் மூலம்தான் எமது மக்களை மீண்டும் ஒரு நல்ல நிலைக்குக் கொண்டு வர முடியும் என்றார்.

இக் கூட்டத்தில் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் தங்கி இருக்கின்ற மக்களை முகாம்களில் இருந்து மீண்டும் கரையோரப் பகுதிகளை அண்டிய மேட்டுநிலப் பிரதேசங்களிலும், கரையோரத்தை அண்டிய பாடசாலைகளிலும், பாதுகாப்பான இடங்களில் உள்ள வீடுகளிலும் தற்காலிகமாகக் குடியமர்த்துவது பற்றி ஆராயப்பட்டது.

இக் கூட்டத்தில் கடற்படைத் தளபதிகளான மங்களேஸ், காதர்,கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கலைவாணன், மாவீரர் போராளி குடும்ப நலன் காப்பகப் பொறுப்பாளர் திருக்குமரன், ஊரக வளர்ச்சிப் பணி பொறுப்பாளர் கந்தம்மான், மற்றும் வடமராட்சி கிழக்கின் கிராமசேவகர்கள், மருதங் கேணி உதவி அரச அதிபர், பச்சிலைப் பள்ளி பிரதேச செயலர், மற்றும் கிராமவாசிகள் எனப் பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## இலங்கையில்....

வாழவேண்டுமென்றே கருதுகின்றேன். இதனையே உலகில் உதவி வழங்கும் பல நாடுகளும் எதிர்பார்க்கின்றது. என்று அமெரிக்க முன்னைநாள் ஜனாதிபதி பில்கிளிங்டன் சி.என்.என். ஊடாக லாரி கிங் நேரடி ஒலிபரப்பில் தெரிவித்துள்ளார்.

## ஆதாரத்துடனும்....

களை நாம் காணக் கூடியதாக உள்ளது. ஊடகச் செய்திகளில் தவறுகளும் பக்கச்சார்புத் தன்மையும் இருப்பது, தற்பொழுது முன்னெடுக்கப்படும் மனிதாபிமான உதவிப் பணிகளுக்கான கூட்டு முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் என்பதால், அவல நிலையைக் கருத்திற்கொண்டு, செய்தி வெளியிடுவதில் அவதானமும், பொறுப்பும் இருக்க வேண்டும் என்று இதனூடாக வேண்டிக் கொள்கின்றோம்.ஆரம்ப கட்டத்தில், அநேகமான ஊடகவியலாளர்கள் கொழும்பை மையமாகக் கொண்டிருக்கும் வகையில் ஊடகக் கவனம் கொழும்புக்கு அண்மித்த பிரதேசங்களிலேயே இருந்தது. இது எங்களால் விளங்கிக் கொள்ளக்கூடியது. தற்பொழுது ஊடகக் கவனம் வடக்குக் கிழக்கின் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு திரும்பியிருக்கும் வகையில் இன்னும் கூட செய்திகளில் சில உண்மைத் தன்மையற்ற நிலை காணப்படுவது அதிர்ச்சி தருவதாக உள்ளது. வடக்கில் புலிப் புரட்சியாளர் நலன்புரி நிலையத்துக்குத் தீ வைத்தார்கள், தெற்கில் இருந்து வரும் உதவி விடுதலைப் புலிகளால் தடுக்கப்படுகின்றது, ரஷ்ய வைத்தியர்களுக்கு புலிகளின் பிரதேசத்துக்குச் செல்ல அனுமதி மறுப்பு போன்ற செய்திகள் துரதிர்ஷ்டவசமானவை. இத்தகைய செய்திகள் தொடர்பாகப் பொருத்தமான தரப்புக்களிடம் இருந்து, உதாரணத்துக்கு யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழு அல்லது சம்பந்தப்பட்ட தரப்புடன் உண்மைத் தன்மை பற்றி சரி பார்த்துக் கொள்வது உள்நோக்கத்துடன் செய்திகளை வழங்கும் மூலங்களில் தங்கியிருப்பதை விடச் சிறந்தது.இந்த வகையில் மனிதாபிமானப் பணி தொடர்பான செய்திகளில் திரிபு ஏற்படாமல் இருப்பதை ஊடகங்களுக்கு வசதி செய்து கொடுக்கும் முகமாக, சில விடயங்களைத் தெளிவுபடுத்துவது பொருத்தமானது எனக் கருதுகின்றோம்.

தனிநபரோ, நிறுவனங்களோ, மற்றும் எவராக இருப்பினும் அழிவுப் பிரதேசங்களுக்கு வந்து பார்வையிடுவதையும், நலன்புரி நிலையங்களில தங்கியிருப்பவர்களைச் சந்திப்பதையும், மாவட்ட மட்டத்தில் உள்வரும் எல்லா உதவிகளையும் பொறுப்பாக பதிவுக்குட்படுத்தி வெளிப்படைத் தன்மையுடன் வைத்திருப்பதற்காக ஒழுங்கமைக்கப்பட்ட அமைப்புக்களின் காத்திரத் தன்மையை அறிந்து கொள்வதற்கும் நாம் திறந்த மனதுடன் வரவேற்கின்றோம். மாவட்ட மட்டத்தில் அரச அதிபர், சர்வதேச உள்ளூர் தொண்டர் நிறுவனங்கள், மக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய இக்கட்டமைப்பு, மிகச் செயற்திறன் மிக்க ஒன்றென நிரூபிக்கப்பட்டுள்ளது. இங்கு விஜயம் செய்யும் சர்வதேச தொண்டர் நிறுவனப் பிரதிநிதிகள், ஐ.நா அமைப்பின் அதிகாரிகள் போன்றோர் இக்கட்டமைப்பின் செயற்றிறனை வெகுவாகப் பாராட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. எங்கள் நிர்வாகப் பிரதேசத்துக்குள் மனிதாபிமானப் பணி தொடர்பாக எல்லோருக்கும் தங்குதடையற்ற அனுமதி உண்டு என்பதுடன், உதவிப் பொருட்களைக் கொண்டு வரும் வாகனங்கள் விடுதலைப் புலிகளால் திருப்பி அனுப்பப்படுகின்றன என்ற குற்றச்சாட்டில் எவ்வித உண்மையுமில்லை என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றோம். மனிதாபிமான உதவிக்கெனக் கொண்டு வரும் பொருட்கள் மீது வரியேதும் அறவிடப்படுவதில்லை என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். மனிதாபிமானப் பணி தொடர்பான விடயங்களில் விளக்கங்கள் தேவைப்படின் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

## சர்வதேச

சிலவற்றைச் செய்திருக்கிறார்கள். அடுத்தடுத்த கட்டங்களில் எமது மக்களின் மறுவாழ்வுப் பணிகளை முன்னெடுப்பது சம்பந்தமாகவும் அதற்கான கட்டமைப்புக்களை நிறுவுவது சம்பந்தமாகவும் சர்வதேச உதவிகளை எமது மக்களுக்கும் சரியான முறையில் பகிர்ந்தளிக்கக் கூடிய கட்டமைப்புக்களைத் தோற்றுவிக்க வேண்டும். அதுவே எமது தலைமைப்பீடத்தினுடைய கரிசனையாகவும் இருக்கின்றதென்பதையும் நாங்கள் அவர்களுக்கு வலியுறுத்தியிருக்கின்றோம். அதற்கான ஏற்பாடுகள் பற்றி சிறிலங்கா அரசோடும் சர்வதேச சமூகத்தோடும் விரைந்து பேசி எமக்கு அது பற்றிய விளக்கங்களையும் தெளிவுகளையும் ஏற்படுத்தும்படி கூறியுள்ளோம்.

**கேள்வி: நோர்வே அரசாங்கம் எவ்வாறு உதவியை சிறிலங்காவுக்கு வழங்கியுள்ளது?**

பதில்: இதுவரை சிறிலங்காவுக்கான உதவிகள் எந்தெந்த நாடுகள் எவ்வளவு என்பது இன்னும் தெளிவாகத் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், இலங்கைத்தீவில் எமது தாயகப் பிரதேசம் தான் இயற்கை அனர்த்தத்தில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளது. ஆகவே, அந்த அடிப்படையில் சர்வதேச சமூகம் தனது உதவிகளைச் சரியான முறையில் பகிர்ந்தளிக்க வேண்டும். அது எங்களுடைய மக்களுக்கு சரியான முறையில் சேரவேண்டும் என்பது பற்றிய விடயங்களைத்தான் வலிறுத்தியிருக்கின்றோம். ஏற்கனவே இந்தப் பேரலை ஏற்பட்டு மூன்று, நான்கு நாட்களும் இங்குள்ள உள்ளூர் வளங்களும், விடுதலைப் புலிகளின் கட்டமைப்புக்களும், தமிழர் புனர்வாழ்வுக் கழகம் போன்ற தொண்டர் ஸ்தாபனங்களுமே இந்த சுமையைத் தாங்கிநின்றன. ஆகவே, இனி சர்வதேச நிறுவனங்கள் இதற்கான உதவிகளைப் பெருமளவில் திருப்ப வேண்டு'ம் என்பதை இன்றைய சந்திப்பில் மீண்டும் வலியுறுத்தியுள்ளோம்.

**கேள்வி: நோர்வேத் தூதுவர் 170 மில்லியன் அமெரிக்க டொலர்களைத் தங்களுடைய அரசாங்கம் வழங்கும் என்று கூறியுள்ளார்?**

பதில்: நான் நினைக்கிறேன். இது ஒட்டு மொத்தமான உதவியாகத்தான் இருக்கும். அதில் எங்களுடைய தாயகப் பிரதேசத்துக்கு எவ்வளவு ஒதுக்கப்படும் என்பது பற்றி அவர்கள் தீர்மானிக்கவில்லை. எங்களுடைய திட்டமிடலுக்கும் அபிவிருத்திக்குமான செயலகம் ஒரு தேவை மதிப்பீட்டைச் செய்து கொண்டிருக்கிறது. அது சம்பந்தமான வேலைத்திட்டங்கள் முடிந்தவுடன் நாங்கள் சர்வதேச சமூகத்துக்கு அதனை கையளிக்கவுள்ளோம். ஆகவே, சர்வதேச சமூகம் எங்களுடைய மக்களுக்கான உதவிகளைச் சரியான முறையில் சென்றடையக் கூடிய வகையில் உதவி புரிய வேண்டும்.

**கேள்வி: மக்களுக்கு சிறிலங்கா அரசாங்கத்திடம் இருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள்?**

பதில்: நாங்கள் இப்போது மக்களுக்கான மனிதாபிமான உதவிகளைத்தான் எல்லோரிடம் கோரியிருக்கின்றோம். அனைவரும் மனமுவந்து இந்த மனிதாபிமான நெருக்கடிக்கு, பெரிய பேரழிவு ஏற்பட்ட சூழலில் உதவ வேண்டும் என்பதுதான் நாம் எல்லோரிடமும் முன்வைக்கும் பொதுவான கோரிக்கை.

**கேள்வி: வருகின்ற உதவிகள் தடுக்கப்படுகின்றன என்பது பற்றி?**

பதில்: இது ஒரு முக்கியமான விடயம். நாம் ஒரு அறிக்கையை வெளியிடவுள்ளோம்.தெற்கில் இனவாத சக்திகளும், ஊடகங்களும் தவறான பிரசாரங்களைச் செய்து வருகின்றன. எமது தாயகப் பகுதிக்குள் வரும் பொருட்கள் கடத்தப்படுவதாகவும், பறிக்கப்படுவதாகவும் சரியாகச் சென்றடையவில்லை என்றும் விடுதலைப் புலிகள் சில முகாம்களை எரித்ததாகவும் பல தவறான பிரச்சாரங்களைத் தெற்கிலே கட்டவிழ்த்து விட்டிருக்கிறார்கள். எமது தாயகப் பிரதேசத்திலே மிகவும் கட்டுக் கோப்பாகவும், மிகுந்த ஒழுங்கமைப்போடும் மனிதாபிமானப் பணிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இதைச் சீர்குலைக்கும் நோக்கோடுதான் திட்டமிட்ட ரீதியில் தெற்கிலே இருந்து இந்தப் பிரசாரத்தைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறர்கள். சர்வதேச ஊடகங்கள், உள்ளூர் ஊடகங்கள் அனைத்திற்கும் நாம் பகிரங்க வேண்டுகோள் ஒன்று விடுக்கின்றோம். நேரடியாக வந்து பார்த்து நீங்கள் உண்மைகளை வெளியிடுங்கள். உண்மைக்குப் புறம்பான செய்திகளைப் பரப்புகின்ற இந்த சக்திகளின் செய்திகளை நம்புவது மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருக்கும் மக்களை மிக மோசமாகப் பாதிக்கும். ஆகவே, பாதிக்கப்பட்ட அப்பாவி மக்களைத் தாக்குகின்ற இப்படியான செயற்பாடுகளைத் தவிர்க்குமாறு அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றோம் எனத் தெரிவித்தார்.

மேற்படி சந்திப்பு நேற்று நண்பகல் 1.00 மணிக்கு கிளிநொச்சியில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெற்றது.

விடுதலைப்புலிகளின் தரப்பில் தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வின் அவர்கள், விடுதலைப்புலிகளின் பொருளாதார ஆலோசகர் ஜோய்மகேஸ்வரன், சிரான்பணிப்பாளர் இரோனியஸ் செல்வன் ஆகியோரும்,நோர்வேத் தரப்பில் சிறிலங்காவிற்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ்பிறஸ்கரும் அவரது உதவியாளரும் கலந்து கொண்டனர். (சோ)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு சனவரி மாதம் 05 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.